விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 25 சனிக்கிழமை (09.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 21

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

# சனல் 4 இல் வெளியிடப்பட்ட வீடியோக்காட்சி உண்மையானது

## ஐ.நா.புலனாய்வாளர்கள் திட்டவட்டம்

(கொழும்பு)

இலங்கையின் அரச படையினர் போன்ற சீருடை அணிந்தவர்கள், கைகள் கட்டப்பட்டு நிர்வாணமாக்கப்பட்ட சிலரை சுட்டுக்கொல்வதுபோல் சர்வதேச ஊடகங்களில் வெளியிடப்பட்டிருந்த வீடியோ காட்சி உண்மையானவைதான் என ஐக்கிய நாடுகள் அமைப்பினால் ஏற்பாடுசெய்யப்பட்ட புலனாய்வாளர்கள் கூறியுள்ளனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் ஆட்சி மாற்றத்துக்கான வெற்றி அலைவீசத் தொடங்கிவிட்டது

### மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாநகர முதல்வர் சிவகீதா பிரபாகரன், சரத் பொன்சேகாவை ஜனாதிபதியாக்கும் பயணத்தில் வந்து இணைந்து கொண்டதில் எமது கட்சிக்கு எந்தவிதமான பங்களிப்பும் இல்லை. ஆனாலும் தேசீயரீதியாக நாம் உருவாக்கியுள்ள அலையுடன் வந்து இணைபவர்களை நாம் வரவேற்கின்றோம் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

மாநகர முதல்வர் சிவகீதா பிரபாகரன் ஐ.தே.க தலைவர் (16ஆம் பக்கம் பார்க்க)

## வேலுப்பிள்ளையின் மனைவியை விடுவிக்க அரசாங்கம் அனுமதி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை காலமானதை தொடர்ந்து அவரது துணைவியார் பார்வதியை தடுப்பு காவலிலிருந்து விடுவிக்க அரசு அனுமதித்துள்ளது.

காலம் சென்ற திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் இறுதிச்சடங்கு வல்வெட்டித்துறையில் அவரது சொந்த வீட்டில் நடை பெறவுள்ளது. அதற்கு ஏற்றவாறு அவரது பூதவுடல் அவர்களது தூரத்து உறவினரான சிவாஜிலிங்கத்தின் உதவியுடன் வல்வெட்டித்துறைக்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது.

திருவேங்கடம் (16ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் சிறைச்சாலைக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் உண்ணா விரதப் போராட்டம் மேற்கொண்டு வரும் அரசியல் கைதிகளை தமிழ்க் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எஸ். கஜேந்திரன் ஆகியோர் சந்தித்துப் பேசியுள்ளனர்.

நேற்று யாழ். சிறைச்சாலைக்குச் சென்ற அவர்கள் கைதிகளின் நிலைமைகள் தொடர்பாக கேட்டறிந்தனர்.

இதேவேளை கைதிகளின் விடுதலை தொடர்பாக மாவை சேனாதிராஜா எம்.பி. நீதி அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் நேற்றுப் பேச்சுவார்த்தை (16ஆம் பக்கம் பார்க்க)

## இரவுநேர பஸ்சேவை 9 மணிக்கு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கான இரவுநேர ஒரு பஸ் சேவை தினமும் இரவு 9 மணிக்கு ஆரம்பமாகுமென வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பிரதான பிராந்திய முகாமையாளர் கணேசபிள்ளை அறிவித்துள்ளார்.

இச் சேவை நாளைமுதல் ஆரம்பமாகுமெனவும் இதற்கான (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவிடம் கூட்டமைப்பு சரணாகதி அடைந்து விடவில்லை

### கூட்டமைப்பு எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவிடமும் ஜே.வி.பியினரிடமும் தமிழ்க் கூட்டமைப்பு முற்றுமுழுதாக சரணாகதி அடைந்துவிடவில்லை. ஆட்சி மாற்றத்தை வலியுறுத்த வல்ல பலத்தை கொண்டுள்ள எமது கட்சி சரியான தெரிவு ஒன்றுக்கு ஆதரவளித்திருக்கிறது. அவ்வாறு தெரிவு செய்யப்படக்கூடியவர் சரியான பாதையில் சென்று எமது மக்களின் நலன்களுக்கு முக்கியத்துவமளிப்பதற்கு நாம் ஆதரவு வழங்கியிருக்கிறோம்.

இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார். எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் பொன்சேகாவுக்கு தமிழ்க் கூட்டமைப்பு ஆதரவளிப் (16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மேயரின் பாதுகாப்பு நீக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபையின் மேயர் சிவகீதா பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட இராணுவ பாதுகாப்பு உடனடியாக அமுலுக்குவரும் வகையில் அகற்றப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேயர்சிவகீதா எதிர்க்கட்சிகளின் பொதுவான வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா விற்கு ஆதரவளிக்கத் (16ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகளின் கருத்துக்களால் அடக்குமுறைக்கு முயற்சிக்கக் கூடாது

### அரசிடம் மல்வத்த பீடாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை அடக்குமுறைக்கு உட்படுத்தும் முயற்சிகளை ஆளும் கட்சி மேற்கொள்ளக் கூடாது என கண்டி மல்வத்த பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

வணக்கத்திற்குரிய தம்பர அமில தேரர் கைது செய்யப்பட்ட சம்பவம் அரசாங்கம் தொடர்பான பிழையான கருதுகோள்களை வெளிப்படுத்தக் கூடுமென மல்வத்த பீடாதிபதி ஜனாதிபதிக்கு கடிதம் ஊடாக சுட்டிக்காட்டியுள்ளார்.

தம்பர அமில (16ஆம் பக்கம் பார்க்க)

## தம்பர தேரர் நேற்று விடுதலை

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தேசிய பிக்குகள் முன்னணி மற்றும் தேசப்பற்றுடைய தேசிய இயக்கம் ஆகியவற்றின் தலைவரான தம்பர அமில தேரர் நேற்று வெள்ளிக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஹொறணை நீதவான் வி.ஏ.ஆர். ஆட்டிக்கல முன்னிலையில் (16ஆம் பக்கம் பார்க்க)

## டெங்கு நோயினது அறிகுறிகள்

- காய்ச்சல், தலைவலி, வாந்தி, நிணநீர்க் கணுக்கள் வீங்குதல், மூட்டு நோவு, மூட்டு வீக்கம், தசை நோவு, தோலின் கீழ் சிவப்பு நிறத் தடங்கள்.
- டெங்குக் காய்ச்சலில் டெங்கு குருதிப் பெருக்கு, டெங்கு அதிர்ச்சி ஆகிய நிலைகள் ஏற்படுவதுடன் மரணமும் சம்பவிக்கலாம்.
- நான்கு வகையான டெங்கு வைரஸ் கிருமிகள் நோயை ஏற்படுத்துவதால் அதே வகை நோய்க்கிருமி தொற்றினாலன்றி மீண்டும் நோய் ஏற்படலாம்.

நோய் ஏற்பட்டால் ஆரம்பத்திலேயே உரிய வைத்திய ஆலோசனை பெற்று ஏனையோருக்கும் ஏற்படாமல் பாதுகாப்போம்.

-வலம்புரி

## கரித்தாஸ்-கியூடெக் பெயரில் பணம் சேகரிக்கும் போலிக் குழு

யாழ்ப்பாணப் பகுதியில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் சமூக மட்டக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்றும் வன்னியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவும் பொருட்டு தாம் நிதி சேகரிப்பதாகவும் கூறிக் கொண்டு சில போலிநபர்கள் வீடு வீடாகச் சென்று நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றமை பற்றிய தகவல் தெரிய வந்துள்ளது.

இத்தகைய போலி நிதி சேகரிப்பவர்களின் நடவடிக்கை எமக்கு கவலை அளிப்பதாகவும் எமது நிறுவனத்தின் செயற்பாடுகளைக் களங்கப்படுத்துவதாகவும் உள்ளதால் இத்தகையவர்களை மக்கள் இனம் கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் கேட்டுக் கொள்கின்றார்.

(ச-5)

## வைத்திய நிறுவனங்களிற்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சகல தனியார் ஆயுர்வேத வைத்திய நிறுவனங்கள், மேலைத் தேய வைத்திய நிறுவனங்களிற்கும் டெங்கு நோய் தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள், வைத்திய உத்தியோகத்தர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)


### மாட்டிறைச்சிக் கடை இடமாற்றம்

புங்கங்குளத்தில் இயங்கி வந்தமாட்டிறைச்சிக்கடை மீண்டும் அரியாலை சந்தை,தபால் கட்டை சந்தியில் இன்று (09.01.2010) காலை 7.00 மணிக்கு திறக்கப்படவுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்:- கி.தனபாலன் (324)

### வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகரை அண்டிய பிரதேசத்தில் அல்லது திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் கம்பனி ஒன்றின் ஊழியர்கள் தங்குவதற்கு வீடு தேவை. வாடகைக்கு கொடுக்க விரும்புவோர்கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.

021 5671782
077 2487101

(325)

### ஹெஸ்கோணர்

மாபெரும் மலிவு விற்பனை


விற்றுத் தீர்த்தல்

ஹெஸ் கோணர்

இல.59/2, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

(323)





யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் வீதிகளுக்கு நடுவே வைத்துள்ள பரல்களுள் நீர் காணப்படுகின்றது. அவற்றுக்குள் கழிவுப் பொருட்கள் போடப்பட்டுள்ளன. அவற்றையே படங்களில் காண்கிறீர்கள். ஆனால் எவருக்கும் அதனை அகற்ற வேண்டும் என்ற எண்ணம் தோன்றவில்லை. இவற்றின் மூலமும் நுளம்புகள் பெருகும் அபாயம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மற்றொரு கைதி வைத்தியசாலையில்

தம்மை பொது மன்னிப்பின் பேரில் விடுதலை செய்யக்கோரி யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்த மற்றும் ஒரு கைதி யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மயக்கமுற்ற நிலையில் 3அரசியல் கைதிகள் அனுமதிக்கப்பட்ட நிலையில் மற்றும் ஓர் அரசியல் கைதியான ஆர்.ரஜிவன் (வயது-24) என்பவர் உடல் பலவீனம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-7)

## அந்தியேட்டி அழைப்பும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



வித்தாக 19 04 1974

ஆண்டவன் மடியில் 27 11 2009

27.11.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பச் செல்வம்

### அமரர் தங்கவேல் உதயகுமார் (வெள்ளி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (10.01.2010) நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 5.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரதலட்சுமி உணவகம்,
அம்மன் கோயில்,
வல்வெட்டித்துறை.

-குடும்பத்தினர்.

(304)

## மகேஸ்வரனின் நினைவு தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் இந்துக் கலாசார அமைச்சர் மகேஸ்வரனின் இரண்டாவது ஆண்டு நினைவு தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை 11மணிக்கு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆன்மீக பேருரையும், நினைவுப் பேருரையும் அதனைத் தொடர்ந்து 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், முதியோருக்கு உடுபுடையும் வழங்கப்படும். தொடர்ந்து விசேட அன்னதானமும் இடம் பெறும். (ச-3)

## தற்காலிகமாக வீதி மூடுதல்

அவசர அவசிய திருத்த வேலைகளுக்காக கடற்கரை வீதி துண்டிச்சந்தியிலிருந்து, கொய்யாத்தோட்டம் சந்தி வரையான பகுதி தற்காலிகமாக 12.01.2010 முதல் மறுஅறிவித்தல் வரை கனரக வாகனப் பாவனைக்கு தடைசெய்யப்பட்டுள்ளது என்பதைப் பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

இதனால் ஏற்படும் சிரமங்களை அனுசரித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி யோ.பற்குணராசா
மாநகர முதல்வர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(C-4166)

## இலங்கைத் தமிழரசுக் கட்சி வருடாந்த தேசிய மாநாடு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வருடாந்த தேசிய மாநாடு இம் முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இடம்:- யாழ்ப்பாணம், நல்லூர், சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபம்.

காலம்:- 2010 ஜனவரி 10ஆம் திகதி

நாள்:- ஞாயிற்றுக்கிழமை

நேரம்:- மு.ப.10.00 மணி

### நிகழ்ச்சி நிரல்

- மௌனப் பிரார்த்தனை
- தமிழ்த்தாய் வாழ்த்து
- இலங்கைத் தமிழரசுக் கட்சி கீதம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- பொதுக் குழுத் தீர்மானங்கள்
- இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 60ஆம் ஆண்டு மலர் வெளியீடு
- விருந்தினர் உரை
- நன்றியுரை

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்த காலச் சூழ்நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் கௌரவ இரா.சம்பந்தன் பா.உ அவர்கள் சமகால தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான தமது தலைமை உரையை நிகழ்த்துவார் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

மாவை சோ.சேனாதிராசா
பொதுச் செயலாளர்.

சூ.சே.குலநாயகம்
நிர்வாகச் செயலாளர்,
தலைமைச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(C-4168)

## அறிவித்தல்

## இலங்கைத் தமிழரசுக் கட்சி வருடாந்த தேசிய மாநாடு

எதிர்வரும் 10.01.2010 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வருடாந்த தேசிய மாநாடு தவிர்க்க முடியாத காரணங்களினால் யாழ்ப்பாணம், நல்லூர், சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறும் என்பதை அழைக்கப்பட்டவர்களுக்கும் கட்சியின் அங்கத்தவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைமைச் செயலகம்
30, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.
08.01.2010.

மாவை சோ.சேனாதிராசா
பொதுச் செயலாளர்.

(C-4167)

# இன்று ஒரு தகவல்

## வாயால் வந்த வினை

வாயை வைத்துக் கொண்டு சும்மா இரு என்று சொல்வதுண்டு. அது எப்படி வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்க முடியும்?

ஒன்று – பேசவேண்டும்.

இல்லையென்றால் சாப்பிடவேண்டும்.

இது இரண்டில் ஏதாவது ஒரு வேலையை வாய் செய்து கொண்டுதான் இருக்கும்.

இதுதான் நம்முடைய பழக்கம்.

இருந்தாலும் பெரியவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் பேச்சையும் குறைத்துக் கொள். சாப்பாட்டையும் குறைத்துக் கொள். உடம்பு நல்லா இருக்கும். மனசும் நல்லா இருக்கும் என்கிறார்கள்.

ஒரு பொன்மொழியும் சொல்வதுண்டு.

மனிதனுக்கு இரண்டு விதமான பலவீனங்கள் உண்டாம். ஒன்று சும்மா இருக்க வேண்டிய நேரத்தில் பேசுவது. இன்னொன்று பேச வேண்டிய நேரத்தில் சும்மா இருப்பது. பேச்சுப் பெரியதுதான். இருந்தாலும் மௌனம் அதைவிடப் பெரியது என்று சொல்வார்கள்.

இதையெல்லாம் விளக்குவதற்கு வேடிக்கையாக ஒரு கதை சொல்வதுண்டு.

ஒரு ஊரில் புதுப்பாலமொன்று கட்டினார்கள். கட்டி முடிந்ததும் அதைத் திறந்து வைப்பதற்கு ஒரு பெரிய விழாவை ஏற்பாடு செய்தார்கள். அந்த விழாவிற்கு அமைச்சர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் எல்லோரும் வந்திருந்தார்கள்.

குறுக்கே ஒரு ரிபனைக் கட்டினார்கள். அமைச்சர் அதை வெட்டி போக்குவரத்தை ஆரம்பித்து வைத்தார்.

முதலில் அவருடைய கார் போனது. அதைத் தொடர்ந்து அதிகாரிகளின் கார்கள் சென்றது.

அதன் பின் பொதுமக்களின் வாகனங்கள் சென்றது. போக்குவரத்து கோலாகலமாக ஆரம்பமாகியது.

அந்த விழாவில் ஒரு பரிசுத் திட்டம் அறிவித்திருந்தார்கள். அதாவது அன்றைக்கு நூறாவதாக வரும் வாகனத்துக்குப் பணமுடிப்பாக 10 ஆயிரம் ரூபா கொடுப்பதாகத் திட்டமிட்டிருந்தார்கள்.

போக்குவரத்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் எல்லோரும் நின்றார்கள்.

ஒவ்வொரு காராக எண்ணிக்கொண்டே வந்தார்கள்.

அந்த நூறாவது கார் வந்து கொண்டிருந்தது. கார் ஓட்டிக் கொண்டு வந்தவரைக் கீழே இறங்கச் சொல்லிப் பணமுடிப்பைக் கொடுத்தார்கள். எல்லோரும் கைதட்டினார்கள். அதன்பின் ஓர் அதிகாரி அவரிடம்,

'இந்தப் பணத்தைக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று கேட்டார். அவர் சொன்னார்

'முதலில் ஒரு டிரைவிங் லைசன்ஸ் வாங்க வேண்டும்' என்றார். அதிகாரிகளுக்கு அதிர்ச்சி.

'அப்படியானால் இந்த ஆள் லைசன்ஸ் இல்லாமலா வண்டி ஓட்டிக் கொண்டு வருகிறான்?' என்றார்கள்.

காருக்குள் உட்கார்ந்திருந்த அவருடைய மனைவி நிலைமையைப் புரிந்து,

கணவனைக் காப்பாற்றியாக வேண்டுமே என்று நினைத்தார். உடனே வாயைத் திறந்தார்.

'ஐயா! அவர் சொல்வதை நம்பாதீர்கள். இவர் குடிபோதையில் இருக்கும்போது இப்படித்தான் உளறுவார்' என்றார்.

அதிகாரிகளுக்கு மேலும் அதிர்ச்சி.

'இவன் குடித்துவிட்டு வேற வண்டி ஓட்டுகிறானா?' என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

காருக்குள் இருந்த அவனுடைய அப்பா இதைக் கவனித்தார். அவருக்குக் காது சரியாகக் கேட்காது. ஏதோ சிக்கல் இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டார். மெதுவாக முனக ஆரம்பித்தார்.

இதற்குத்தான் அப்பவே சொன்னேன்...

'ரோட்டில் நிறுத்தியிருக்கிற காரைத் திருடாதே... என்று! அப்ப கேட்காமல் இப்ப மாட்டிக் கொண்டு முழிக்கிறான்' என்றார். அதிகாரிகளுக்கு மேலும் அதிர்ச்சி

'ஓ... இது ஒரு திருட்டுக்காரா?' என்று கேட்டார்கள்.

வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்கத் தெரியாததால் இவர்கள் வம்பில் மாட்டிக் கொண்டார்கள்.

ஆனாலும் இந்தப் பழமொழி இவர்களுக்காக சொல்லப்பட்டது இல்லை.

நல்ல மனிதர்களுக்காக சொல்லப்பட்டது.

பேசவேண்டிய நேரத்தில் பேசவேண்டும். சும்மா இருக்க வேண்டிய நேரத்தில் சும்மா இருக்க வேண்டும்.

இதுதான் நாம் புரிந்துகொள்ள வேண்டிய ஒரு முக்கியமான கருத்து.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# விவசாய உற்பத்தியை மேலும் 30 வீதத்தால் அதிகரிக்கத் திட்டம்

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு விவசாய உற்பத்தியை மேலும் 30 சதவீதத்தால் அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் அதற்காக பல திட்டங்களை வகுத்துள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாயிகளின் மேம்பாட்டுக்காக வகுத்துள்ள திட்டத்திற்கு ஏற்ப உளவு இயந்திரம், மண்வெட்டி உட்பட இறக்குமதி செய்யப்படும் சகல விவசாய உபகரணங்களும் முழு வரி விலக்குடன் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

அதேநேரம் விவசாயகத்திற்குப் பயன்படுத்தப்படும் கிருமி நாசினிகளையும், களை கொல்லிகளையும் தரமான முறையில் உள்நாட்டில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த நான்கைந்து அரசாங்கங்கள் பயங்கராவதம் குறித்தும், பிரபாகரன் தொடர்பாகவும் பேசினர், செயற்பட்டனர்.

ஆனால் அந்த அரசாங்கங்களால் பயங்கரவாதத்தையோ அல்லது பிரபாகரனையோ ஒழிக்க கிடைக்கவில்லை.

எனினும், எமது ஜனாதிபதி இவற்றை முழுமையாக ஒழித்துக் காட்டினார். நாம் ஜனாதிபதியின் ஆலோசனையின் அடிப்படையில் பயிரிடுவோம்.

நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்ற தேசிய திட்டத்தை ஆரம்பித்து வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றோம்.

இதன்பயனாக விவசாயிகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

நெல்லுக்கு உயர் விலை கிடைக்கப் பெற்றுள்ளது. கடந்த வருடத்தில் போதிய மழைவீழ்ச்சி கிடைக்காததால் தான் நெல் உற்பத்தியில் சிறிது வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதனை ஈடுசெய்ய தேவையான அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று கூறினார். (2-6)

# அரச சேவையில் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகல மாகாணங்களிலும் அரச சேவையில் நிரந்தரமற்ற நிலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண அரச சேவையில் பணிபுரியும் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

மத்திய மற்றும் மாகாண அரச சேவையைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களுக்கும் இவ்வாறு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கு ஏதுவாக இவ்வாறான ஊழியர்களின் விபரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அரச சேவையில் தற்போது தற்காலிக, அமைய, பதிலீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் கடமை புரியும் ஊழியர்களுக்கு கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்திருந்தது.

இதன் பிரகாரம் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதியில் 180 நாட்கள் திருப்திகரமாகவும், தொடர்ச்சியாகவும் சேவை புரிந்துள்ள தற்காலிக ஊழியர்கள் சேவையில் நிரந்தரமாக்கப் படவுள்ளனர்.

இதேவேளை இதன்பின்னர் பொதுத் திறைசேரியின் அனுமதி இன்றி தற்காலிக அடிப்படையில் ஊழியர்களை நியமனம் செய்யக் கூடாதுஎன அரசாங்கநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு சகல திணைக்கள தலைவர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக தெரிகிறது. (2-6)

# இராசி பலன்

*09-01-2010*
*(மார்கழி 25 சனிக்கிழமை)*
*நவமி முற்பகல் 8.43 மணிவரை*
*சுவாதி முன்னிரவு 9.56 மணிவரை*
*இராகுகாலம் 9.32-11.02 மணிவரை*
*சுபநேரம் 3.32- 5.02 மணிவரை*
*அமிர்தசித்தம்*

| | |
|---|---|
| மேடம் | அபூர்வ சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், திடீர் பயணம், நல்ல வரவேற்பு. |
| இடபம் | பணவருவாய், சத்துருஜெயம், காரிய அனுகூலம், மனமகிழ்ச்சி. |
| மிதுனம் | காரிய இடையூறு, அமைதிக் குறைவு, ரோகநிலை, போசன சுகம். |
| கடகம் | பயந்த சுபாவம், உடல்நலம், பெரியோர் உதவி, முயற்சி தாமதம். |
| சிங்கம் | அந்நியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, போசன சுகம், சுபசெய்தி. |
| கன்னி | மாதர் நட்பு, வேலைச்சுமை, தனவிரயம், அதிக பிரயாசை. |
| துலாம் | ஜனவசியம், நண்பர்கள் உதவி, செய்தொழில் முன்னேற்றம், சயனசுகம். |
| விருச்சிகம் | தந்தைவழி உறவு, உணர்ச்சி வசப்படல், சுபசெலவு, பிரயாணம். |
| தனுசு | முயற்சி கைகூடும், இனிய சம்பவம், கீர்த்தி, நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | சுபநிகழ்வு, கடினமுயற்சி, புதிய தகவல், அதிகாரம். |
| கும்பம் | ஆன்றோர் சந்திப்பு, சரீரப் பிரயாசை, வீண் பயம், பொருள் சேர்க்கை. |
| மீனம் | வீண் தொல்லை, போசன சுகம், ஆரோக்கியக்குறைவு, மரியாதைக் குறைவு. |

வளவன்

# மஹிந்தவிடமே நான் அரசியல் கற்றுக் கொண்டேன்-பொன்சேகா

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமே தாம் அரசியல் கற்றுக் கொண்டதாக எதிர்க்கட்சிகளின் பொதுவான வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளதாக தெரிகிறது.



எனவே தாம் எதிர்வரும் தேர்தலில் வெற்றியீட்டினால் அந்தப் பெருமை ஜனாதிபதியைச் சாரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளை இல்லாதொழித்து நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற உந்துதல் இந்த ஆட்சியாளர்களைப் பார்த்ததன் பின்னர் உதயமாகியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 140 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 220 | 240 | 240 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 40 | 40 |
| கோவா | 100 | 120 | 100 |
| கரட் | 120 | 40 | 140 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 150 | 160 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 270 | 280 | 160 |
| வெண்டிக்காய் | 90 | 100 | 60 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 150 | 160 | 150 |
| லீக்ஸ் | 60 | 80 | 100 |
| பீற்றூட் | -- | -- | -- |
| கறிமிளகாய் | 250 | 280 | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 100 | 120 | 120 |
| கத்தரி தம்புள்ள | 100 | 120 | 120 |
| கீரை - 1 பிடி | 35 | 45 | 35 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 | 35 |

வடமாகாண அஞ்சல் வங்கி வாடிக்கையாளர் நலன்கருதி 19 தபால் நிலையங்களில் அஞ்சல் வங்கி நடவடிக்கைகளை கணனி மயப்படுத்தி, அதற்கான பயிற்சி வகுப்புக்களை யாழ்.தபால் நிலையப் பயிற்சிக் கல்லூரியில் நடத்தியது. இந்நிகழ்வில் வடமாகாண அஞ்சல் வங்கி முகாமையாளர் இ.ராஜா மகேந்திரசிங்கம் ஆரம்ப உரையாற்றுவதையும், அருகில் அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரட்ணம், கொழும்பு தபால் வங்கி நிர்வாக முகாமையாளர் ஜெயந்த கமகே, வங்கி உத்தியோகத்தர் வி.சுதாகர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட தபால் அதிபர்களையும் படங்களில் காணலாம்.

## வாக்கெடுப்பு நிலைய சிரேஷ்ட தலைவர்களுக்கான பயிற்சி வகுப்பு

(அல்வாய்)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வாக்கெடுப்பு நிலைய சிரேஷ்ட தலைவர்களுக்கான பயிற்சி வகுப்பு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30, 10.30, 1.30, 3.30 ஆகிய நேரங்களில் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்கு தெரிவு செய்யப்பட்டவர்களை தவறாது வருகை தருமாறு யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவித்துள்ளார். (6-4-19)

## டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள குடத்தனை அ.த.க. பாடசலையில் அண்மையில் டெங்கு விழிப்புணர்வு நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது. பாடசாலை அதிபர் எஸ்.தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அம்பன் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகரும், வடமராட்சி கிழக்கு கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளருமான த.தபேந்திரராசா கருத்துரை வழங்கினார்.

மேலும் டெங்கு நோய் விழிப்புணர்வு பற்றிய விவரணப் படம் மாணவர்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டது.

மேலும் இவ் விழிப்புணர்வு நடவடிக்கை பொற்பதியிலுள்ள குடத்தனை றோ.க.த.க. பாடசாலையிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (6-4)

## இருதய சுவாசத்திற்கான பயிற்சிகள் யாழ்ப்பாணத்தில் விஸ்தரிக்கப்படும்

### குருதி மாற்று பிரயோக சேவைகள் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் சடுதியாக இருதய நோயால் மரணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் இதனைக் கட்டுப்படுத்துவதற்கான பயிற்சிகள் யாழ்ப்பாணத்தில் விஸ்தரிக்கப்படுமென யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்ட குருதி மாற்று பிரயோக சேவைகள் பணிப்பாளர் ஆனந்த குணசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது, இருதய சுவாசக் கருவாயை வைத்தியசாலையில் இருந்து வெளியே கொண்டு செல்வதற்கான அம்புலன்ஸ் சேவை செயற்திட்டம் முதன் முதலாக 2006ஆம் ஆண்டு குருநாகல் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் அம்பாறை, மாத்தறை, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் யாழ்ப்பாணத்திற்கு இத் திட்டத்திற்கான 40 மில்லியன் ரூபா பெறுமதியான நவீன வசதி கொண்ட அம்புலன்ஸ் அவுஸ்திரேலியா இலங்கை நட்புறவுச் சங்கத்தினால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ் வரனிடம் கையளிக்கப்பட்டது.

இச்செயற்திட்டம் அடுத்ததாக வவுனியாவிலும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இத் திட்டத்தின் மூலம் முதலில் இருதய சுவாச செயற்பாட்டுப் பயிற்சி மாணவர்களிடையே வழங்கப்படவுள்ளதுடன் முச்சக்கர வண்டி சாரதிகளுக்கும் வழங்கப்படவுள்ளது.

இதற்காக யாழ்ப்பாணம் நகரப் பகுதியை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த 50 பேருக்கு முதலில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இது குடாநாட்டில் பிராந்தியங்கள் தோறும் விஸ்தரிக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (ச-7)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு அறிவுறுத்தல்

(பொன்னாலை)

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகள் தத்தமது சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைக் கமைய பொதுமக்களின் ஒத்துழைப்பினைப் பெற்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கையினை தீவிரப்படுத்துமாறு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலும் நுளம்பு உருவாகக்கூடிய இடங்களை அழித்து விழிப்புணர்வு செயற்பாடுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (6-4-49)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கான ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகளுக்கான ஒன்றுகூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளதால் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் தவறாது சமுகம் தருமாறு வேலையற்ற பட்டதாரிகள் செயற்குழு கேட்டுக் கொள்கின்றது. (6-4)

## அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கை மாணவர் கல்வி நிதியத்தினால் 105 மாணவர்களுக்கு உதவித் தொகை

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவி வழங்கலும் உதவி பெறும் மாணவர்களின் ஒன்று கூடலும் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இம்முறை யாழ். மாவட்டத்திலுள்ள 105 பிள்ளைகள் இவ் உதவியைப் பெறவுள்ளனர். யாழ்ப்பாணம், நல்லூர், தென்மராட்சி, நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரை நகர், வலிமேற்கு, வலி தென்மேற்கு, வலி தெற்கு, வடமராட்சி வடக்கு, வடமராட்சி தென் மேற்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பிரதேசத்தில் வாழும் போர்ச் சூழலில் உழைப்பாளிகளை இழந்த குடும்பத்தைச் சேர்ந்த கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு இவ் உதவித் தொகை வழங்கப்படவுள்ளன.

மேலும் இந்நிகழ்வில் அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஸ்தாபகரும் பொருளாளருமான லெ.முருகபூபதியும் அவரது குழுவினரும் கலந்துகொள்ளவுள்ளதாக சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலைய ஒழுங்கமைப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார். (6-4)




## சமுர்த்தி ஆணையாளரினால் முத்திரைகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகங்களிலுள்ள சமுர்த்தி மகா சங்கங்களுக்குத் தேவையான முத்திரைகளை யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த சமுர்த்தி ஆணையாளர் நாயகம் டபிள்யூ ஜே. எல். எஸ். விஜயவீர யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமாரிடம் மாவட்டச் செயலகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாகக் கையளித்துள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சமுர்த்தி ஆணையாளர் நாயகம் சமுர்த்தி பயனாளிகளுக்கான இம் முத்திரைகளினை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்கும்படியும் இவற்றிற்கான பொருள் விநியோகம் இம் மாத இறுதியில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் பணிப்புரை விடுத்துள்ளார். (6-30)

## கசூரினா கடற்கரைக்கு அதிக எண்ணிக்கையில் மக்கள்

(பொன்னாலை)

காரைநகர் கசூரினா கடற்கரைக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொழுதுபோக்கு மையமாகவும், உல்லாசப் பயணிகளை கவருகின்ற இடமாகவும் காணப்படும் காரைநகர் கசூரினா கடற்கரைக்கு, மக்கள் சென்று வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டதையடுத்தே இங்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் விடுமுறை நாட்களில் நூற்றுக்கணக்கான மக்கள் இங்கு வருகை தருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ்வாறு வருகை தரும் உல்லாசப்பயணிகளின் . நன்மை கருதி காரைநகர் பிரதேச சபை அப்பகுதியில் குடிநீர், மலசலகூட வசதி , உடை மாற்றும் இடம், வாகனப் பாதுகாப்பு இடம் ஆகிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் இதனால் மக்கள் நன்மை அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4-49)

## நிதி ஒதுக்கீடு

(பொன்னாலை)

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 2 இந்து ஆலயங்களுக்கு இந்து கலாசார அமைச்சினால் 4 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் 2 இலட்சம் ரூபா நிதி நவாலி சிந்தாமணிப்பிள்ளையார் ஆலயத்தின் திருத்த வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4-49)

## ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் பரிபாலன சபையினருக்கு,

யாழ். மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது. பொதுமக்கள் செறிவாகக் கூடும் வணக்க ஸ்தலங்களில் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் காணப்பட்டால் ஒரேநாளில் பலருக்கு இந்நோய் பரவலாம். எனவே சகல வணக்க ஸ்தலங்களும் இவ் வாரத்திற்குள் துப்புரவு செய்யப்படவேண்டும்.

இதற்காகப் பிரதேச மக்களின் உதவிடன் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். வணக்க ஸ்தலத்தின் வளாகத்திலும் சுற்றாடலிலும் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் அழிக்கப்பட்டு பூரணமாகத் துப்பரவு செய்யப்படவேண்டும்.

ஆலயங்களில் வெற்று இளநீர் கோம்பைகள் தண்ணீர் தேங்காதவாறு நான்கு துண்டுகளாக வெட்டப்படவேண்டும்.


### டெங்கு கட்டுப்பாட்டு வாரம்

கழிவுநீர் தேங்கி நிறகாதவாறு தினமும் துப்புரவு செய்யப்படவேண்டும். திண்மக் கழிவுகள் கிரமமாக அகற்றப்படவேண்டும்.

**வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்**
பிராந்திய பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

# விஜயநகரக் காலச் சிற்பக்கலை

99




கைலாசநாதர் கோவில்

### விஜயநகரப் பகுதிகளுங் கோயில்களும்

விரூபாக்ஷர் ஆலயம் அமைந்த தானத்தை மையப்பகுதியாகக்கொண்ட விஜய நகரம் காலப் போக்கிலே மிகப்பெரிய நகரமாக வளர்ச்சிபெற்றது. அதில் விரூபாக்ஷபுரம், அச்சுதபுரம், விட்டலபுரம், கிருஷ்ணாபுரம், கமலாபுரம், வரததேவி அம்மன் பட்டினம், மலப்பனங்குடி ,அனந்தசயனக்குடி, நாகலாபுரம், ஒசுப்பேட்டை,திருமலாதேவி, அம்மன் பட்டினம் என்பன அதன் பகுதிகளாகும். அப்பகுதிகளில் பல கோயில்கள் கட்டப்பெற்றன. அவற்றிலே அனந்தசயனக்குடி கோயில், மலப்பனங்குடி மல்லையா கோயில், பால கிருஷ்ண பட்டினக்கோயில் என்பன குறிப்பிடத்தக்கவை.

ஹேமகூட மலையிலும் பல இந்துக் கோயில்களும் சமணக்கோயில்களும் அமைந்திருந்தன. விரூபாக்கன் கோயில், மாதங்க மலைமேல் அமைந்த மாதங்கேஸ்வரர் ஆலயம்,அச்சுதபுரத்து திருவேங் கடநாதன் கோயில், துங்கபத்திரைக் கரையிலே காணப்படும் கேதாண்ட இராமன்கோயில் ஆகிய கோயில்கள் மிகப் பிரசித்தமானவை.

அரண்மனை வளாகத்திலே சிறப்பு மிக்க பல கட்டடங்களின் அழிபாடுகள் காணப்படுகின்றன. அரண்மனைக் கட்டடங்களும் தாமரை மஹால், ஹஸாரராம ஆலயம், தர்பார் வளாகத்தில் அமைந்திருக்கும் புஷ்கரணி, மகாநவமி மண்டபத்து அதிஷ்டானம், கமலாபுரத்தருகில் உள்ள ரகுநாதன்கோயில், துங்கபத்திரையில் தென்கரையில் உள்ளதும் கல்லலாலான இரதத்துடனும் கல்யாண மண்டபத்துடனும் கூடியதுமான விசய விட்டலர் கோவில் ஆகியனவற்றின் சிற்பவேலைப் பாடுகள் உன்னதமானவை.



சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய வைகுந்தப்பெருமாள் ஆலய உள் பகுதி

### வித்யாசங்கர் கோவில்

விஜயநகரக் கலைப்பாணிக்கு உன்னதமான எடுத்துக்காட்டாக சிருங்கேரியில் அமைந்துள்ள வித்யாசங்கர் கோயில் காணப்படுகின்றது. அது சப்தரத வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் கருவறையிலே மூலவர் மூவரின் உருவங்கள் உள்ளன. சாளுக்கியர் கலைப்பாணியின் அம்சங்களையும் கெழதி நாயக்கரின் கலைப்பாணியின் அம்சங்களையும் கொண் டுள்ள அற்புதக்கோலமான அந்த ஆலயம் ஒரு சிற்பக் கூடமாக சிறந்து விளங்கு கின்றது. அது பத்திரா நதியின் கரையில் உள்ள சங்கர மடத்தின் பீடமாக விளங்கும் சிருங்கேரியைச் சேர்ந்ததாகும். இந்தியக் கட்டடக் கலை வரலாற்றில் அக்கோவிலுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. சங்கரர் மடத்தின் அதிபரான வித்யாரண்யர் விஜயநகரத்தை அமைத்துக்கொள்வதில் சங்கம சகோதரர் களுக்கு பெருமளவிலே ஆதரவு புரிந்தார்.

விஜயநகரத்தின் தோற்றம் பற்றிய மரபு வழிக்கதைகள் அவருக்கு சிறப்பிடம் வழங்குகின்றன. அவரின் உருவச்சித் திரங்கள் ஓவியமாகவும் சுதைச்சிற்பமாகவும் விருபாக்ஷர் கோயில் அமைக்கப்பட்டுள்ளன.

இருதல பீடத்தில் அமைந்த வித்யா சங்கரர்கோயிலின் சுவர்பகுதிகளிலே விநோதமான வடிவுகொண்ட சிற்ப வரிசைகள் அமைக்கப்பட்டுள்ளன.சர்வதோ பத்திரமாக நான்கு திசைகளிலும் வாயிலை ஒட்டிச் சிற்பங்கள் சீராக அமைக்கப்பட்டுள்ளன. திருமாலின் தசாவதாரங்களான வராகம், நரசிம்மம்,மச்சம்,கூர்மம் முதலியன அங்கு சிற்பக் கோலத்தில் உள்ளன. சமண தீர்த்தாங்கரரின் உருவங்களும், குதிரையின் மீது அமைந்த கல்கியின் வடிவங்களும் அங்கே காணப்படுகின்றன.தேவியின் மடியில் வைத்திருக்கும் கோலத்தில் பிரமனது உருவமும் ஏழு தலை ஆதிசேடன்மேல் அமர்ந்த இலக்குமி நரசிம்மரின் சிற்பமும் அங்குள்ளன. முகமண்டபத்திலுள்ள தூண் களின் சிற்ப அமைதிகள் மிகவுஞ் சிறப்புடையவை.

### விஜயநகரக் காலக் கோயில்களின் வடிவங்கள்

விஜயநகரம் கர்நாடக தேசத்திலே தோன்றி காலப்போக்கில் தென்னிந்தியப் பகுதிகள் பலவற்றை உள்ளடக்கிய பேரரசாக வளர்ச்சியடைந்திருந்தது. தென்னிந் தியக் கட்டடக் கலை வளர்ச்சியில் விஜய நகரம் ஓர் ஆழமான முத்திரையைப் பதித் துள்ளது. விஜயநகர கலைப்பாணியில் திராவிட கலைப்பாணியின் செல்வாக்கு மேலோங்கியது. கர்நாடகத்துக் கோயில்களி லும் அதன் செல்வாக்கு மிகுந்தளவிலே ஏற்பட்டது. திராவிடக் கலைப்பாணியிலுள்ள கோயில்கள். ஆறுகோணமான அல்லது எட்டுக் கோணமாக சிகரத்தைக் கொண்டிருக்கும். பல்லவர் காலத்துக் கைலாசநாதர் கோயில், வைகுந்தப்பெருமாள் கோயில் முதலிய ஆலயங்கள் நீளப்பாட்டிற் கர்ப்பக்கிரகம், அந்தராளம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டிருந்தன.சோழர் காலத்திலே முகமண்டபம் எனப்படும் அக்கிர மண்டபம்,நந்திபீடம்,கொடிமரம்,பலிபீடம், கோபுர வாசல் என்னும் அம்சங்களையம் கட்டட அமைப்பிற் சேர்த்துக்கொள்வது வழமையாகி விட்டது.

விஜயநகர காலத்திலே ஆலய வழிபாட்டிலும் கோயில் கிரியைகளிலும் பலபுதிய அம்சங்கள் சோந்துவிட்டதாற் கட்டடத்தைப் பிரமாண்டமான அமைப்பாக விஸ்தரிக்க வேண்டியதேவை ஏற்பட்டது. பிற்காலச் சோழர்கள் தில்லை நடராசரைக் குலதெய்வமாகப் போற்றினர். கோயில் என்றால் சைவ சமய மரபிலே பேரம்பலத்தைக்குறிக்கும் அளவுக்குச் சிதம்பரம் மிகச் சிறப்புடைய தலமாக வளர்ச்சி பெற்றது. முதலாம் குலோத்துங்க சோழன் காலம் முதலான மன்னர்களின் கட்டடத்திருப்பணிகளின் பயனாக அத்திருத்தலம் அதன் முன்னைய நிலையைக் காட்டிலும் ஆறு மடங்கு பெரிதாகியது. திருக்காமகோட்டம், நுற்றுக்கால் மண்டபம், நீராழி மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், எழுநிலைக் கோபுரங்கள், மூன்று சுற்றுப் பிரகாரங்கள் என்பன அமைக்கப்பட்டன. அத்துடன் மூலஸ்தானத்திலே கவர்ச்சி பொருந்திய சித்திரவேலைப்பாடுகள் கொண்ட நடராசர் சிலையும் முதலாங் குலோத் துங்கனின் காலத்தில் அமைக்கப்பட்மை குறிப்பிடற்குரியது. சிதம்பரம் கோயிலின் வடிவமைப்பை முன்மாதிரியாகக் கொண்டு விஜய நகரக் காலத்திலே தமிழகத்தின் பிரதான கோயில்கள் விரிவக்கம் பெற்றன. எனவே, விஜயநகரக் கலைப்பாணி பற்றி பேசுமிடத்து திருக்காமகோட்டம், ஆயிரங்கால் மண்டபம், வானளாவிய கோபுரம், சுற்றுப்பிரகாரங்கள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்த வேண்டும்.

விஜயநகர காலத்தில் மிகப் பெருமளவிலே படிமங்கள் உருவாக்கப்பட்டன. உலோகத்திலும் படிமங்கள் உருவாக்கப்பட்டன. உலோகத்திலும் கல்லினாலும் மரத்தினாலும் கதையினாலும் சிற்பங்களையும் படிமங்களையும் விக்கிரகங்களையும் அலங்கார வடிவங்க்ளையும் உருவாக்கி ஆலயங்களிலே அமைத்தார்கள். தேவ கோட்டப் படிமங்கள், விமானம், கோபுரம் ஆகியவற்றின் உருவங்கள் செய்யப்பட்டன. விஜய நகர காலத்தைப் போல முன்னைய காலங்களில் மிகப் பெரும் எண்ணிக்கையில் அவை அமைக்கப்படவில்லை. உதாரணமாகச் சொல்லின், ஒரு மரத்தேரிற் சராசரி 300 சிற்பங்கள் இருப்பின், தமிழகத்தில் 500 தேர்கள் இருக்கக்கூடுமாயின் எல்லாமாக 1,50,000 மரவேலைப் பாட்டிலமைந்த சிற்பங்கள் இருந்திருக்க வேண்டும் என்று கொள்ளலாம். அதேபோல ஒரு கோபுரத்தில் 700 சுதைச் சிற்பங்கள் அமைந்திருக்கும் என்று கொண்டால், தமிழகத்தில் 500 கோபுரங்கள் இருந்ததால் 3,50,000 சிற்பங்கள் வவரை இருந்தன என்று கணக்கிடலாம்.

தேவிகாபுரம் பெரிய நாயகியம்மன் கோயில்முக மண்டபத்துத்தூண் ஒவ்வொன்றிலும் மூன்ற நிலைச் சதுரப்பட்டையில் பன்னிரண்டு சிறிய கற்சிற்பங்கள் காணப் படுகின்றன.

அம் மண்டபத்தில் முப்பது தூண்கள் உள்ளன. அவற்றில் எல்லாமாக 432 கற்சிற்பங்கள் எழில் பொருந்திய வண்ணமாக அமைக்கப்பட்டுள்ளன. விஜய நகரக் காலத்து மண்டபங்கள் அனைத்தை யுங் கணக்கெடுத்து அவற்றிலுள்ள சிற்பங் களை அளவிடுவதற்குக் கணிப்பொறியாலும் இயலாது எனின் மிகையகாது.அவற்றிலே காணப்படும் சிற்ப விநோதங்கள் அதிசயமானவை. மதுரையிலே சுந்தரேஸ்வரரர் கோயிலின் அருகிலுள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் பஞ்சமுக நரசிம்மியம் மீசையுடைய முகமும் பருத்து அகன்ற மார்பகங்களை உடைய அலியின் சிற்பங்களும் காணப்படுகின்றன, திருவண்ணாமலை ஆயிரங்கால் மண்டபத்தில் நடமாடும் நரசிம்மனைக் காணலாம். இவற்றைப் போன்ற உருவங்கள் பல தலங்களில் உள்ளன.

வைகுந்தப்பெருமாள் கோவில்



### விஜயநகர மன்னர்களின் திருப்பணிகள்

விஜயநகரப் பேரரசர்கள் தென்னிந்தியாவின் பல பாகங்களிலே கோயிற் திருப்பணிகள் பலவற்றை மேற்கொண்டனர். பல தலங்களிலே பழுதடைந்த கோயில்களைப் புனராக்கம் செய்தனர்.

கலாநிதி இராசு காளிதாஸ்

வேறு பல தலங்களிலே புதிய கட்டடங்களை அமைத்தனர். பொன் முதலிய உலோகங்களையும் வராகன் முதலான பொற்காசுகளையும் ஆலயத் திருப்பணிகளுக்கென்று ராயர்கள் வாரி வழங்கினார்கள். மூலமூர்த்திகளுக்கும் உற்சவமூர்த்திகளுக்கும் ஆபரணங்களை நன்கொடையாக வழங்கினார்கள். நித்திய, நைமித்திய கருமங்களைச் செய்வதற்கென்று பலவகையான நன்கொடைகளைக் கோயில்களுக்கு வழங்கினார்கள்.

கோயில்களிலே மந்திரோபாசனை செய்வோர்க்கும் ஆராதனை செய்யும் பிரமாணருக்கும் சிவயோகி களுக்கும் பாகவதர்களும் சீவிதமாகவும் அன்னதானக் கொடைக்கென்றும் நன் கொடைகளை வழங்கினார்கள்.சில சமயங்களிலே திருவிழாக் காலங்களிலே ஆயல தரிசணம் பண்ணிச் சிறப்புச் செய்தனர். அவற்றைப் பற்றிய செய்திகள் பெரும்பாலுஞ் சாசன குறிப்புகளாக உள்ளன. (தொடரும்)

# 2010 புத்தாண்டு பலன்கள்



## துலாம்

**(சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள் வரை)**

**சவால்களைச் சமாளிப்பீர்கள்!**

**நல்ல தகவல்களையே நாளும் கேட்க வேண்டும் என்று விரும்பும் துலாம் ராசி நேயர்களே!**

புத்தாண்டு பிறந்து விட்டது. பொருளாதார நிலை உயர்வதற்கான வழிகள் வரப்போகின்றன. குரு உங்கள் ராசியை 9 ஆம் பார்வையாகப் பார்த்து ஆண்டு தொடங்குவதால், சென்ற ஆண்டைக் காட்டிலும் சிறப்பான ஆண்டாக இந்த ஆண்டு அமையப் போகிறது.

ராசிநாதன் சுக்ரன் லாபாதிபதி சூரியனுடனும், 9 க்கு அதிபதி புதனுடனும் கூடி சகாய ஸ்தானத்தில் சஞ்சரித்து இந்த ஆண்டு தொடங்குவதால் எதிர்பாராத பல திருப்பங்கள் இந்த ஆண்டில் நடைபெறப் போகின்றன.

ஆனால் அதே நேரத்தில் ஏழரைச் சனியும் தொடங்கிவிட்டதால், எந்த முடிவும் எடுக்க முடியாத குழப்பங்கள் உருவாகும். தெய்வ வழிபாட்டின் மூலமாக சில நேரங்களில் நீங்கள் வாழ்க்கைப் பாதையைச் சீராக்கிக் கொள்ளலாம்.

அருகில் இருக்கும் சான்றோர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பதன் மூலம் அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும்.

ஜூலை 21 முதல் செப்டெம்பர் 6 ஆம் திகதி வரை செவ்வாயும், சனியும் கன்னி ராசியில் இணையும் நேரத்தில் மட்டும் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

போராடிப் போராடியே ஒவ்வொரு காரியமும் முடிக்கக் கூடிய நிலை அமையும். பொருளாதாரச் சிக்கல்கள் அதிகரிக்கும். வரவிற்கு மீறிய செலவுகள் வந்து வாசல் கதவைத் தட்டும். யோகபலம் பெற்ற நாளில் வரம் தரும் தெய்வங்களை இனம் கண்டு வழிபடத் தொடங்கினால் துன்பங்களில் இருந்து விடுபட இயலும்.

உங்கள் சுய ஜாதகத்தில் உள்ள கட்டங்களையும், புத்தாண்டில் உள்ள கிரக நிலையின் கட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

அவை இணைந்து செயல்பட்டால் துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல் பணிந்து வணங்கி பரிகாரங்கள் செய்து யோகபலம் பெற்ற நாளில் ஸ்தலங்களுக்குச் சென்று வந்தால் வளர்ச்சி மீது வளர்ச்சி ஏற்படும். வருமானமும் வந்து கொண்டே இருக்கும்.

பெயரில் முறையில், எண் கணித அடிப்படையில், சுக்ரன் சுய ஜாதகத்தில் இருக்கும் பாதசார அடிப்படையில் அம்சநிலை பார்த்து, அதற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக்கொண்டால், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எதிர்காலமும் சிறப்பாக இருக்கும். இந்த 2010 இல் குருவின் பார்வை உங்கள் ராசிக்கு எந்தெந்த இடங்களில் எல்லாம் நல்ல மாற்றங்களை வழங்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

### 1-1-2010 முதல் 30-4-2010 வரை

இக்காலம் உங்களுக்கு எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும் காலமாக அமையப்போகிறது. வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாக வள்ளல்களின் உதவி கிடைக்கும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும்.

தந்தை வழி உறவில் இருந்த விரிசல் மறையும். தனாதிபதி செவ்வாய் நீச்சம் பெற்றிருப்பதால் பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகலாம். குடும்பத்தினர் மீது நீங்கள் காட்டும் பாசம் மற்றும் அரவணைப்பு உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடும்.

குருவின் பார்வை 9 மற்றும் 11 ஆகிய இடங்களில் பதிவதால் பொன், பொருள்கள் மற்றும் ஆடை, ஆபரணங்கள் வாங்கிச் சேர்க்கும் வாய்ப்பு வந்து சேரும். வாழ்க்கைத் துணைக்கும், வாரிசுகளுக்கும் தேவையான பொருட்களை வாங்கிக் கொடுத்து மகிழ்வீர்கள்.

அந்நிய தேசத்தில் இருந்து அனுகூலச் செய்திகள் வந்து சேரும். பார்க்கும் குருவைப் பலப்படுத்த வியாழன் தோறும் விரதமிருந்து குரு தெட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது.

குருவின் நேரடிப் பார்வையைப் பலப்படுத்த விரதங்களையும், வழிபாடுகளையம் முழுமையாக மேற்கொண்டால் குழப்பங்களும் அகலும்; குறைகளும் தீரும். எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்தால் எக்காலமும் உங்களுக்குப் பொற்காலம் தான்.

சனி வக்ர கதியில் இயங்குவது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகளால் ஒரு சில பிரச்சினைகள் வந்து அலைமோதும். பிரபலங்களின் தலையீட்டால் ஒரு சில காரியங்களை நல்லவிதமாக முடித்துக் கொள்வீர்கள். சனீஸ்வர வழிபாடு உங்கள் சங்கடங்களைத் தீர்க்கும்.

### 1-5-2010 முதல் 31-8-2010 வரை

இக்காலத்தில் குரு வக்ர கதியில் இயங்குகிறார். அது நன்மைதான். ஏனென்றால் 3, 6 க்கு அதிபதியான ஒரு கிரகம் வக்ர கதியில் இயங்கும்பொழுது மிகுந்த நன்மைகளை வழங்கும்.

எதிர்ப்புகள் அகலும். இன்னல்கள் தீரும். மதிப்பும், மரியாதையும் உயரும். மக்கள் செல்வாக்கு மேலோங்கும். உத்தியோகத்தில் உடன் இருப்பவர் களால் ஏற்பட்ட மக்கள் செல்வாக்கு உயரும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்ற வைகள் படிப்படியாக வந்துசேரும்.

நான்காமிடத்திற்கு அதிபதி வக்ரம் பெறுவதால் பயணங்கள் அதிகரிக்கும். ஸ்தல யாத்திரைகளை மேற்கொள்வீர்கள். தாயின் உடல்நலத்தில் அக்கறை காட்டுவது நல்லது. வீடு கட்டும் முயற்சிக்கு வித்திடும் வாய்ப்பு கிட்டும். ஒரு சிலர் பழைய வீடாக வாங்கி புதுப்பிக்கும் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வர். மீன குருவின் பார்வை பலத்தால் 2, 10, 12 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன.

எனவே, குடும்பத்தினர்களின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். பொருளாதார நிலை உயரும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். பகையாகிச் சென்ற உறவு மீண்டும் நட்பாகும். கொடுக்கல் – வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள்.

குருவின் பார்வை பத்தாமிடத்தில் பதிவதால் தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். பாதியில் நின்ற ப்ணி மீதியும் தொடரும்.

விரய ஸ்தானத்தில் குருவின் பார்வை பதிவது நன்மைதான். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். அயல்நாடுகளில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக்கொள்ளலாமா? என்ற சிந்தனை மேலோங்கும். சுய ஜாதகம் வலுவாக இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். இல்லையேல், இருக்கும் இடத்திலேயே நீடிப்பது நல்லது.

கட்டிய வீட்டை ஒரு சிலர் விற்கும் சூழ்நிலை உருவாகலாம். அதற்காக கவலைப்பட வேண்டாம்.

உங்கள் ராசிக்கு அதிபதியாக அசுர குரு விளங்குவதால், மீண்டும் உங்களுக்கு சொத்துக்கள் வந்து சேரும். சனியின் ஆதிக்கம் வலுவடையும் இந்த நேரத்தில் மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு உங்கள் தொழிலுக்கு கை கொடுத்து உதவும்.

### 1-9-2010 முதல் 31-12-2010 வரை

இக்காலத்தில் குரு வக்ர கதியில் இயங்குகிறார். சனி வக்ர நிவர்த்தியாகி விட்டார். உங்கள் ராசிநாதன் சுக்ரனுக்கு சனி நட்பு கிரகம்; குரு பகை கிரகம். எனவே, வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறிமாறி வந்து கொண்டே இருக்கும். வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டினாலும், அதை ஏற்றுக்கொள்வதில் சில பிரச்சினைகள் உருவாகலாம். எனவே, ஏழரைச்சனி விலகும் வரை பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. வருடக் கடைசியில் சில நல்ல மாற்றங்கள் வந்துசேரும்.

செப்டெம்பர் 22 ஆம் திகதி செவ்வாயும், சுக்ரனும் உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார்கள். அப்பொழுது திடீர் தனலாபம் வந்து சேரலாம்.

**சிவல்புரி சிங்காரம்**

தெய்வ திருப்பணிக்கு செலவிடுவீர்கள். தங்கம், வெள்ளி வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும்.

அக்டோபர் மாதத்தில் புதன், சுக்ரன், சூரியன் ஆகிய மூன்றும் உங்கள் ராசியில் இணைகிறது. எனவே தொட்ட காரியம் வெற்றி பெறும். துணையாக இருப்பவர்கள் கை கொடுத்து உதவுவர். பண வரவு திருப்தி தரும்.

கொள்கைப் பிடிப்போடு செயல்படவும், கொடுக்கல் – வாங்கல்கள் ஒழுங்காகவும், அம்மனை வழி பட்டு வாருங்கள்.

துலாம் ராசியில் பிறந்த பெண்களுக்கு வருடத் தொடக்கத்தில் குடும்ப ஒற்றுமை கூடும். கூட்டுக் குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

கணவன் – மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். மே மாதத்திற்கு மேல் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. விலை உயர்ந்த பொருட்களைக் கையாளுவதில் கவனம் தேவை. ஆகஸ்ட் மாதத்தில் திடீர் விரயங்களைச் சந்திக்க நேரிடும்.

அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவதோடு, சந்தோஷங்களை நாளும் சந்திக்க சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகுவிற்குரிய சிறப்பு வழிபாட்டினையும் யோகபலம் பெற்ற நாளில் செய்து வருவது நல்லது.

(தொடரும்)

# உண்மையைத் தேடாமல் துன்பத்தைப்பெற வேறுவழியில் பயணிக்கிறது த.தே.கூ.

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு சுதந்திரத்தையும் அவர்களுக்கு பூரண கௌரவத்தையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பெற்றுக் கொடுத்தார். புலிகளின் திட்டத்தை செயற்படுத்த முடியாமல் செய்தார்.

அந்த வைராக்கியத்தின் காரணமாகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவரை எதிர்த்தது என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் துன்பப்பட்டனர், கஸ்ரப்பட்டனர் அந்த நிலைமை மாற்றமடைந்து வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மையான உரிமையை தேடாமல் மீண்டும் துன்பத்தை பெற்றுக் கொடுப்பதற்கு வேறு வழியில் பயணிக்கின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொன்சேகாவிற்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளது. முழுமையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு சம்பந்தன் தலைமை தாங்கவில்லை. கூட்டமைப்பிலும் பல பிரிவுகள் இருக்கின்றன. கூட்டமைப்பு பல துண்டுகளாகப் பிளவுபட்டுள்ளது.

கிழக்கு மாகாண உறுப்பினர்கள் எம்முடனேயே இருக்கின்றனர். தமிழ் மக்களுக்கு ஜனநாயக உரிமையை பெற்றுக் கொடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கவில்லை. புலிகளால் பெற்றுக் கொள்ள முடியாததை பெற்றுக் கொள்வதற்கு கூட்டமைப்பு முயற்சிக்கின்றது.

எனினும், உண்மையான சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு நாம் முயற்சிக்கின்றோம் என்று கூறியுள்ளார். (2-6)

# தேசிய பிரச்சினைக்கு வலயங்கள் அடிப்படையில் அதிகாரங்களை பகிர்வதன் மூலம் தீர்வு காணலாம்

## சரத் என் சில்வா

தேசிய பிரச்சினைக்கு வலயங்களின் அடிப்படையில் அதிகாரத்தை பகிர்வதன் ஊடாக அரசியல் தீர்வை காண வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும். அதன் அடிப்படையில் வலயங்களுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்கலாம் என்று முன்னாள் பிரதமர் நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்தார்.

எதிரணியின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு வழங்குவதற்காகவே அரசியல் மேடைகளில் ஏறுகின்றேன். மாறாக எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு எம்.பியாக பதவி பெறும் எண்ணம் எதுவும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் இவ்விடயம் தொடர்பில் மேலும் கூறியதாவது, தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரம் எனும் போது அதில் பல விடயங்கள் உள்ளன. முக்கியமாக நான் தனிப்பட்ட முறையில் தற்போதைய மாகாண சபை முறைமையை விரும்பவில்லை.

காரணம் மாகாணங்கள் மிகப்பெரிய பரப்பளவாக உள்ளன. எனவே அவற்றில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதில் சிக்கல்கள் ஏற்படலாம். எனவே வலயங்களின் அடிப்படையில் அலகுகளுக்கு அதிகாரங்களை பகிர வேண்டும் என்பதே எனது யோசனையாகும்.

அவற்றுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்கலாம். அதாவது மத்திய அரசுக்கு கீழ்வரும் வகையிலேயே பொலிஸ் அதிகாரங்கள் அமைய வேண்டும்.

மேலும் காணி அதிகாரங்களும் மத்திய அரசாங்கத்தின் கீழேயே அமைய வேண்டும். முக்கியமாக மத்திய அரசுக்கு தேவைப்படின் காணிகளை பெற்றுக் கொள்ளும் உரிமையும் இருக்க வேண்டும். அவற்றுக்கு முதலமைச்சர்களை நியமிக்கலாம். தொகுதி அடிப்படையில் உறுப்பினர்களை தெரிவு செய்யு முடியும்.

மத்திய அரசாங்கம் குறித்த வலயத்தில் ஒரு சர்வதேச விமான நிலையத்தை அமைக்க வேண்டுமானால் காணிகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமைய வேண்டும் என்றார்.

இதேவேளை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு எம்.பியாக வரும் விருப்பம் இல்லை. அதனையும் தாண்டிய என்னாலான ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்க ஆசைப்படுகின்றேன். நான் மதவிடயங்களுடன் மிகவும் நெருங்கியவன், மதப் பற்றுக் கொண்டவன் என்றும் தெரிவித்துள்ளார். (2-6)

# பொய்களுக்கு சோரம் போகாமல் எமது பயணத்தில் கைகோர்க்க அனைவரும் முன்வர வேண்டும்

## ஜனாதிபதி



(கொழும்பு)

ஆட்சியைப் பிடிக்கும் சுயநலத்தில் சரத் பொன்சேகா செயல்படுகிறார் எனவும் எமது மக்கள் இத்தகைய பொய்களுக்குச் சோரம் போகின்றவர்களல்ல எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்த நாட்டைத் தூண்டாடுவதற்குத் துணைபோன ரணில் விக்கிரமசிங்க, மனோ கணேசன் ஆகியோரோடு சம்பந்தன் சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எட்டு உறுப்பினர்கள் தற்போது சரத் பொன்சேகாவோடு இணைந்து கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் திருகோணமலை எம்.பி. ஒருவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சரத் பொன்சேகாவோடு ஏற்படுத்திக்கொண்ட நிபந்தனைகளை வெளிப்படுத்தினார்.

அவர் தமிழ் மொழியில் தொலைக்காட்சியில் பகிரங்கமாக அதனை வெளிப்படுத்தியதனால் பெரும்பாலானோருக்கு அது புரிந்திருக்காது. அவ் வெளிப்பாடானது நாட்டுக்குப் பெரும் அச்சுறுத்தலைத் தரக்கூடியது என்பதை சகலரும் உணர வேண்டும்.




நான் பிரதமராக பதவி வகித்த போது புலிகளின் பகுதிக்கு போக முடியாத நிலை இருந்தது. சீருடையுடன் எமது படையினர் அங்கு செல்ல முடியாத நிலையே காணப்பட்டது.

கச்சேரி, பொலிஸ், நீதிமன்றம் என அனைத்தும் அவர்களின் நிர்வகாத்தின் கீழ் இருந்தன. இதற்கெதிராக செயற்படுவதற்காகவே மக்கள் என்னை நியமித்தனர்.

பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பை மக்கள் எனக்கு வழங்கினர். நான் அதனை முழுமையாக நிறைவேற்றியுள்ளேன்.

இவ்வாறு எதிர்காலத்தைப் பாதுகாத்து நாட்டை அபிவிருத்தியில் கட்டியெழுப்பும் எனது பயணத்தில் சகலரும் கைகோர்த்துச் செயற்பட முன்வரவேண்டும்.

மக்கள் எம்முடனேயே உள்ள னர் என்ற பூரண நம்பிக்கை எனக்குண்டு எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# கடவுள் வழங்கிய அறிவைக் கொண்டு தேர்தலில் பொருத்தமானவரை தெரிவு செய்ய வேண்டும்

## கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித்



(கொழும்பு)

தங்களது விருப்பத்திற்கு ஏற்ற வகையில் மக்கள் தேர்தலில் வாக்களிக்க வேண்டுமென கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கடவுள் வழங்கியுள்ள அறிவைக் கொண்டு யார் இந்த நாட்டுக்கு தலைமை தாங்க பொருத்தமானவர்கள் என்பதனை தாமாகவே தீர்மானிக்க வேண்டுமென்றும் தேர்தல் சுதந்திரமானதும், நியாயமானதுமாக நடைபெறுவதற்கு அனைத்து வேட்பாளர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு எவ்வாறான நிரந்தர அரசியல் தீர்வுத் திட்டங்களை முன்வைக்கின்றார்கள் என்பதனை வேட்பாளர்கள் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாததென தெரிவித்துள்ள அவர் செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையில் காணப்படும் இடைவெளியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எந்தவொரு கட்சிக்கும் தாம் ஆதரவளிக்கவில்லை எனவும் கத்தோலிக்க மக்கள் தங்களது சிந்தனை ஓட்டத்திற்கு ஏற்ற வகையில் தேர்தலில் வாக்களிக்கக் கூடிய உரிமை காணப்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (2-6)

# அரசாங்கத்துடன் இணையும் எண்ணம் எப்போதுமே இருந்ததில்லை - லால்காந்த



(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளப் போவதாக வெளி யான செய்திகளில் உண்மையில்லை என ஜே.வி.பி.யின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

இந்த செய்திகள் வெறும் வதந்திகள் மட்டுமே என்றும் இவ்வாறான வதந்திகளின் மூலம் அரசாங்கத்தின் வங்குரோத்து நிலைமை வெளிப்பட்டு நிற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து கொள்ளும் எண்ணம் தமக்கு எப்போதும் இருந் ததில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு வாக்களிப்பார் என்பது திண்ணமாகியுள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை அடக்குமுறைக்கு உட்படுத்தக்கூடாது

## மல்வத்து பீடாதிபதி

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை அடக்குமுறைக்கு உட்படுத்தும் முயற்சிகளை ஆளும் கட்சி மேற்கொள்ளக்கூடாது என கண்டி மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

வணக்கத்திற்குரிய தம்பர அமில தேரர் கைது செய்யப்பட்ட சம்பவம் அரசாங்கம் தொடர்பான பிழையான கருதுகோள்களை வெளிப்படுத்தக்கூடுமென மல்வத்து பீடாதிபதி ஜனாதிபதிக்கு கடிதம் ஊடாக சுட்டிக் காட்டியுள்ளார்.

அதில் தம்பர அமில தேரர் நாட்டின் முக்கியமான பௌத்த பிக்குகளில் ஒருவர் எனவும் மத அடிப்படையில் பல்வேறு முக்கிய பொறுப்புக்களை வகித்து வருவதாகவும் குறித்த பௌத்த பிக்கு கைது செய்யப்பட்ட சம்பவம் மக்கள் மற்றும் பௌத்த பிக்குகளின் இடையில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது தான். ஆனால் சட்டம் ஒழுங்கு கடைப்பிடிக்கப்படும் போது வெளிப்படைத் தன்மையும் நியாயமும் பின்பற்றப்பட வேண்டுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் கொள்கையுடையவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்துவதன் மூலம் அரசாங்கம் மீது மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்தில் பாதகத் தன்மை ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# எதிர்க் கட்சிகளுடன் இணைய திட்டமில்லை - நவீன் திஸாநாயக்க

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயற்படும் திட்டமில்லை என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களில் வெளியான செய்திகள் வெறும் வதந்திகள் மட்டுமே எனவும் தாம் ஒருபோதும் ஆளும் கட்சியைவிட்டு விலகப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு தாம் ஆதரவளிக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நவீன் திஸாநாயக்கவின் சகோதரரும் அம்பாறை மாவட்ட முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளருமான மயந்த திஸாநாயக்க ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

# யார் விலகிச் சென்றாலும் இறுதிவரை ஜனாதிபதியுடனேயே இணைந்திருப்போம்

## ஆறுமுகம் தொண்டமான்



(கொழும்பு)

யார் விலகிச் சென்றாலும் இறுதி வரையில் ஜனாதிபதியுடன் இணைந்திருப்போம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளதாக லக்பிம செய்தி வெளியிட்டுள்ளது.

சிலர் கட்சியை விட்டுச் சென்ற போதிலும் அது தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த தேர்தலின் போது ரணில் விக்ரம சிங்கவிற்கு ஆதரவளித்தோம். மலையக மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்காளித்தார்கள்.

ஏனைய பகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சி படு தோல்வியடைந்தது. ரணில் விக்கிரமசிங்கவின் தோல்விக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொறுப்பு சொல்லாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதியுடன் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதித் தேர்தலின் பாதி வழியில் நிற்கின்றோம். இவ்வாறான ஓர் நிலையில் ஆதரவை வாபஸ் பெற்றுக் கொள்ள முடியாது.

ஆரம்பத்தில் எடுத்த தீர்மானத்திற்கு அமைய செயற்படுவோம் எனவும் இடை நடுவில் கட்சி மாறுவது நாகரீகமாகாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# பொன்சேகாவின் உடன்படிக்கை முரண்பாடுகளைத் தூண்டவல்லது

## ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் நாட்டில் மீண்டும் பயங்கரவாதத்தை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்கும் என சுற்றாடல் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்க வாய்ப்பிருப்பதாகவும் சரத் பொன்சேகாவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள 14 அம்சங்களைக் கொண்ட உடன்படிக்கை இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டை ஏற்படுத்தவல்லதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ் உடன்படிக்கையின் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், வடக்குகிழக்கை மீளவும் ஒன்றிணைத்தல், விடுதலைப்புலி போராளிகளை விடுதலை செய்தல் போன்ற நிபந்தனைகளில் மூலம் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்க வாய்ப்பு இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# இலங்கைத் தமிழர்களின் கல்விக்காக சென்னைப் பல்கலைக்கழகம் ரூ.2 கோடி ஒதுக்கீடு

## துணைவேந்தர் தகவல்



(சென்னை)

இலங்கைத் தமிழர்களின் கல்விக்காக, சென்னைப் பல்கலைக்கழக வரவு செலவுத் திட்டத்திலிருந்து இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் திருவாசகம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது, குடியரசு தினத்தை முன்னிட்டு சென்னைப் பல்கலைக் கழகம் சார்பில், "படித்ததை பிறருக்கு படிக்க கொடுப்போம்" என்ற தலைப்பிலான நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. அன்று காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை, ஒரு மாணவருக்கு 50 புத்தகம் என்ற அளவில், புத்தகங்களை திரட்ட திட்டமிட்டுள்ளோம்.

இத் திட்டத்தில் அதிக புத்தகங்களை சேகரித்துக் கொடுக்கும் ஐந்து மாணவர்கள், சென்னைப் பல்கலைக்கழகத்தின் 72 துறைகளில் அவர்கள் விரும்பும் துறையில் இலவசமாக படிக்கும் வாய்ப்பைப் பெறுவர். அதிக புத்தகங்களை சேகரித்து தரும், 10 கல்லூரிகளுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

இலங்கைத் தமிழர்கள் மற்றும் அகதிகளுக்கு அவர்கள் வாழும் இடங்களுக்கு சென்று, கல்வி வசதி செய்து தருவது தொடர்பாக எதிர்வரும் 18 ஆம் திகதி கனிமொழி எம்.பி., இலங்கைத் துணைத் தூதர் கிருஷ்ணமூர்த்தி, மறுவாழ்வுத்துறை இயக்குநர் கலைவாணன் ஆகியோர் பங்குபெறும் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழர்களின் கல்வி வளர்ச்சிக்காக நாளை தாக்கல் செய்யப்படவுள்ள பல்கலைக்கழக வரவு செலவுத் திட்டத்தில் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்படவுள்ளது. எதிர்வரும் கல்வியாண்டு முதல், இலங்கைத் தமிழர்களின் பிள்ளைகள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களாக இருப்பர். இவ்வாறு திருவாசகம் கூறினார். (6)

# அதிபர் சேவை ஆசிரியர் சேவைக்கு புதிய சேவை பிரமாணக் குறிப்புக்கள்

## கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்

(கொழும்பு)

கல்வியமைச்சின் கீழ்வரும் சேவைகளுக்குப் புதிய சேவைப் பரிமாணக் குறிப்புக்களைத் தயாரிக்கும் பணி தற்பொழுது நடைபெற்று வருவதாக கல்வியமைச்சின் கல்வி சேவைகள் தாபனப் பிரிவு மேலதிக செயலாளர் கே. முகம்மட்தம்பி தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 06/2006 இன் பிரகாரம் ஒவ்வொரு சேவைக்கும் தனித்தனியான சேவை பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட வேண்டும்.

இதனடிப்படையில் இலங்கை கல்வி நிருவாக சேவை, இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை, இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவை என்பனவற்றுக்குப் புதிய பிரமாணக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் இப்பணி இம்மாதம் நிறைவு பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் தற்பொழுது நடைமுறையிலுள்ள சேவை பிரமாணக் குறிப்புக்களை விடவும் அதிபர் உத்தியோகத்தர்களுக்கு நலன்கள் பெற்றுத் தரும் வகையில் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

## நினைவஞ்சலி நிகழ்வு

1974ஆம்ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4ஆவது உலகத் தமிழராட்சி மாநாட்டின் போது நிகழ்ந்த சம்பவத்தில் உயிர்நீத்த பொதுமக்களின் 35 ஆவது வருட நினைவஞ்சலி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு முற்றவெளியில் அமைந்துள்ள நினைவுத்தூபி முன்றலில் நடைபெறவுள்ளது.

உயிர்நீத்தவர்களின் உறவினர்கள், குடும்பத்தினர் மற்றும் பொது அமைப்புகள், சமூக தொண்டு நிறுவனங்கள், பொது மக்கள் அனைவரும் மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். இந்நிகழ்வினை ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா அணி, புளொட்) ஆகியன ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-4)


## வாடகைக்கு வாகனங்களை அமர்த்துதல் -2010

சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு – வ.மா வன்னிப் பிராந்தியத்தில் சேவையில் ஈடுபடுத்தும் நோக்கில் பின்வரும் வாகனங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள முடிவுசெய்துள்ளது.

1. 12 Seated Van -06 Nos/02 wheel drive Pickup -06 Nos -Ac Vehicles

எனவே தகுதியுடைய வாகன உரிமையாளர்கள் ரூபா 100 கட்டணம் செலுத்தி பின்வரும் இடங்களில் இதற்கான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு – வ.மா – திருகோணமலை
2. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை – யாழ்ப்பாணம்
3. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை – கிளிநொச்சி
4. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை – முல்லைத்தீவு
5. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை – வவுனியா
6. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை – மன்னார்

பூரணப்படுத்தப்பட்ட ஆவணங்கள் யாவும் பின்வரும் முகவரிக்கு 18.01.2010 11.00 Hours முன்பதாக கிடைக்கப்பெறல் வேண்டும்.

**Chairmen -PMPC,**
**Ministry of Health Indigenous Medicine,**
**Varothayanagar, Kanniya Road, Trincomalee.**

இ. இரவீந்திரன்,
செயலாளர்

(இ)


# விசாவுக்கு விண்ணப்பிக்கும் முறையில் மாற்றம்

## அமெரிக்கத் தூதரகம் அறிவிப்பு

(சென்னை)

விசாவிற்கு விண்ணப்பிக்கும் முறையில் ஏற்படும் முறைகேடுகளைத் தவிர்க்கவும் விசா விண்ணப்பிக்கும் முறையில் துல்லியம் கருதியும் என்.ஐ.வி.விசா விண்ணப்பிக்கும் முறையை அமெரிக்கத் தூதரகம் மாற்றியமைத்துள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள டி.எஸ்-156-157-158 விண்ணப்பப் படிவங்களுக்கு மாற்றாக முற்றிலும் இணையத்தளம் மூலமாகவே விண்ணப்பிக்கும் டி.எஸ் 160 என்ற முறையை அமெரிக்கத் தூதரகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இது குறித்து சென்னை அமெரிக்கத் துணைத் தூதரக அதிகாரி ஆண்ட்ரூ சிம்கின் கூறியதாவது, உலகளவில் அமெரிக்கா விசாவுக்கான விண்ணப்பங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாலும் விசா விண்ணப்பிக்கும் முறையில் ஏற்படும் பல்வேறு முறைகேடுகளைத் தடுக்கவும் விண்ணப்ப முறையின் துல்லியம் கருதி புதிய தொழில்நுட்பம் மூலம் மேம்படுத்தும் நோக்கிலும் அமெரிக்க வெளியுறவுத்துறை புதிய விண்ணப்பப்படிவத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. ஏற்கனவே டி.எஸ். 156-157- 158 படிவங்களுக்கு மாற்றாக இந்தப் புதிய டி.எஸ்-160 படிவம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் படிவம் முற்றிலும் இணையத் தளத் தொழில்நுட்பத்தில் இயங்கக் கூடியது. மற்ற இணையத்தள விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்வது போலவே இந்தப் படிவத்தையும் பூர்த்தி செய்யலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை இணையத் தளத்தின் மூலமாகவே சமர்ப்பிக்கலாம். படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்பியதும் தோன்றும் அத்தாட்சிப் பக்கத்தை மட்டும் விண்ணப்பதாரர்கள் பிரதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

விண்ணப்பதாரர்களின் நேர் காணலுக்கு முந்தைய விண்ணப்பப் பரிசீலனை மற்றும் முன் ஆய்வு சார்ந்த காலதாமதங்களைக் குறைக்க இந்த முறை உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் விண்ணப்பதாரர்கள் புதிய படிவத்தைப் பயன்படுத்த வேண்டும். அதேபோல் முன்னதாக நேர் காணலுக்கு விண்ணப்பிக்க பழைய விண்ணப்பத்தில் பூர்த்திசெய்ய வேண்டும். உதாரணமாக ஜனவரி 25 அன்று நேர் காணலுக்கு விண்ணப்பிக்க ஜனவரி 18ஆம் திகதியே பழைய விண்ணப்பம் கொண்டு பூர்த்தி செய்ய வேண்டும்.

விசாக் கட்டணம் மற்றும் நேர்காணல் முறையில் மாற்றம் இருக்காது. இந்தப் புதிய படிவத்தை http:ceac.state.gov/genniv/ என்ற இணையத்தள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# புதிய நிர்வாக அலகு குறித்து தென்மராட்சியில் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பாரிய நிர்வாகக் கட்டமைப்பினை கொண்டுள்ள தென்மராட்சி பிரதேசத்தில் நிர்வாக செயற்பாடுகளை இலகுபடுத்தும் முகமாக அப்பகுதியில் நிர்வாகத்தை இரண்டாகப் பிரிக்குமாறு தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றிய பிரதிநிதிகள் விடுத்த வேண்டுகோளை அடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் கொடிகாமத்திற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

மேற்படி விடயம் தொடர்பில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் தென்மராட்சி பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் விநாயகமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் கந்தையா, தற்போது தென்மராட்சியின் சகல நிர்வாக அலகுகளும் சாவகச்சேரியை மையமாகக் கொண்டு இயங்குகின்றன என்றும் நிலப்பரப்பிலும் நிர்வாக அலகிலும் பெரிதாகக் காணப்படும் தென்மராட்சி பிரதேசத்தினை நிர்வாக வசதி கருதி இரண்டு பிரிவுகளாக நிர்வகிப்பதன் மூலம் தமது பகுதியான தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்திலும் சிறந்த அரச நிர்வாகத்தை இலகுவாக நடைமுறைப்படுத்த முடியும் என்றும் பகிரங்க வேண்டுகோள் விடுத்தார்.

இக்கூட்டத்தில் சிறப்புரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட செயலக மற்றும் பிரதேச சபைகளின் நிர்வாக செயற்பாடுகளின் வசதி கருதி சில நிர்வாகப் பிரிவுகளை மீளாய்வு செய்வது குறித்து தன்னால் ஏற்கனவே பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தென்மராட்சி பிரதேசமும் அடங்கும் எனத் தெரிவித்தார்.

இதன்பிரகாரம் தென்மராட்சி பிரதேச செயலகமானது சாவகச்சேரியை மையமாகக் கொண்டு தென்மராட்சி மேற்கு பிரதேச செயலகமாகவும் கொடிகாமத்தை மையமாகக் கொண்டு தென்மராட்சி கிழக்கு பிரதேச செயலகமாகவும் நிர்வகிக்கப்படவுள்ள அதேவேளை தென்மராட்சிப் பிரதேசசபையானது சாவகச்சேரியை மையமாகக் கொண்டு தென்மராட்சி மேற்கு பிரதேச சபையாகவும் கொடிகாமத்தை மையமாகக் கொண்டு தென்மராட்சி கிழக்கு பிரதேசசபையாகவும் நிர்வகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேநேரம் தென்மராட்சி கல்வி வலயத்தினுள் சாவகச்சேரி என்னும் ஒரேயொரு கோட்டக் கல்வி அலுவலகமே காணப்படுவதாகவும் அதனையும் மாணவர்களின் கல்வி மேம்பாடு கருதி சாவகச்சேரி கொடிகாமம் என இருகோட்டக் கல்வி நிர்வாக அலகுகளாக ஏற்படுத்துமாறும் தென்மராட்சி கிழக்கு (கொடிகாமம்) அபிவிருத்தி ஒன்றிய பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

இவ் வேண்டுகோள் தொடர்பாக வட மாகாண சபையின் கல்வி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிர்வரும் கல்வியாண்டில் அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தார். (2-6)


## KALAITHUTHU COLLEGE OF AESTHETICS

FORUM

"Contemporary Bio -Technology: A Perspective"

Presentation: Paul Rohan Ph.D

With Discussion

Date : Monday 11 January 2010

Time : 5.00pm - 6.00pm

Venue : Kalaithuthu College of Aesthetics, 128, David Road, Jaffna

**The Boys from Brazil**

(Starring Gregory Peck, Lawrence Olivier and James Mason)

**All are Welcome**

(C-4965)

## எவ்வாறு லசந்தவின் உயிர் பறிக்கப்பட்டது காரணம் தொடர்பாக சர்ச்சை

(கொழும்பு)

இலங்கையின் முன்னணி ஊடகவியலாளர்களின் ஒருவரும் தி சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான அமரர் லசந்த விக்ரமதுங்க உயிரிழந்தமைக்கான காரணம் தொடர்பில் சர்ச்சை எழுந்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்தாரா அல்லது தலையில் ஏற்பட்ட காயங்களினால் உயிரிழந்தாரா என்பது குறித்து சர்சசை ஏற்பட்டுள்ளது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகின்றமை குறிப்பிடத்தக்கது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது வைத்தியர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டதாகவே சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், கூரிய ஆயுதமொன்றினால் லசந்தவின் தலையில் தாக்கப்பட்டதனால் அவர் உயிரிழந்திருக்க வேண்டுமென சட்ட வைத்திய அதிகாரி சந்தேசம் வெளியிட்டுள்ளார்.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பில் மிரிஹான காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வந்ததாகவும், பின்னர் லசந்தவின் குடும்ப சட்டத்தரணிகளின் வேண்டுகோளுக்கு இணங்க புலனாய்வுப் பிரிவினரிடம் விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பில் துரிதகதியில் விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்கிஸ்ஸ நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

படுகொலைச் சம்பவம் குறித்த வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிகிறது. (2-6)

## பிலிப் அல்ஸ்டனின் கருத்து தொடர்பில் இலங்கை அரசாங்கம் கடும் அதிருப்தி

(கொழும்பு)

சட்டவிரோத படுகொலைகள், குற்றச் செயல்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி பிலிப் அல்ஸ்டனின் கருத்துக்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளதாகத் தெரிகின்றது.

இதற்கமைவாக சனல் 4 வீடியோக் காட்சிகள் தொடர்பில் பிலிப் அல்ஸ்டன் வெளியிட்டுள்ள கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய சனல் 4 வீடியோக் காட்சிகள் தொடர்பில் மூவர் அடங்கிய விசாரணைக் குழு வழங்கிய அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அவை உண்மையானவை என பிலிப் அல்ஸ்டன் தெரிவித்துள்ளமை தெரிந்ததே.

எனினும், பிலிப் அல்ஸ்டனின் இவ் நடவடிக்கைகள் ராஜதந்திர விதிமுறைகளை மீறும் வகையில் அமைந்துள்ளதென வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம அறிக்கை ஒன்றின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

## நாயன்மார்க்கட்டுப் பகுதியில் நீண்ட காலமாகத் திருத்தப்படாத வீதி

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு பிரதேச சபையின் நிர்வாகப் பகுதியிலுள்ள நாயன்மார்க்கட்டுப் பாரதி ஒழுங்கையையும் நல்லூர் வடக்கு விநாயகர் வீதியையும் இணைக்கும் வயல்வெளி ஒழுங்கை முப்பது வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ் வீதியைத் திருத்துவது குறித்து நாயன்மார்க்கட்டுப் பாரதிமன்றம் சனசமூக நிலையம் ஆகியன உரிய அதிகாரிகளுக்குப் பல மகஜர்கள் அனுப்பியும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மாகாண உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்.மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் இவ் வீதியைத் திருத்தும்படி பணித்தும் இதுவரை இவ்வீதி திருத்தப்படாததையிட்டு இப்பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

மேலும் வலிகிழக்குப் பிரதேச சபை செயலாளருக்கு நேரில் அறிவித்தும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இவ் வீதி வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் மூலம் திருத்தப்படும் என இப் பகுதி மக்கள் எதிர்பார்த்தும் அதுவும் நடைபெறவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ்வீதியின் மதகு வாய்க்கால் பல வருடங்களாக சேதமுற்றும் அதுவும் இதுவரை திருத்தப்படவில்லை. இதேபோல் நாயன்மார்க்கட்டுப் பாரதி வீதியும் பல வருடகாலம் திருத்தப்படாத நிலையில் உள்ளதால் அப்பகுதியால் பயணம் செய்யும் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ் வீதியைத் திருத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (6-4-134)


## வலி தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

## பொது அறிவித்தல் -2010

**01. மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் ஆதனவரி பற்றிய அறிவித்தல் -2010**

வரியிறுப்பாளர்களுக்கு,

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 141ஆவது பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி தற்போது அமுலில் உள்ள வருடாந்த மதிப்பீட்டிற்கமைய (10%) 2010 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதற்குமுரிய வரித்தொகையை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு அவ் வருடத்திற்கான மொத்த வரியில் 10% கழிவும் ஒவ்வொரு கந்தாயங்களுக்குரிய வரியை அந்தந்தக் கந்தாயத்தின் முதல் மாத இறுதிநாளுக்கு முன் செலுத்துவோருக்கு 05% கழிவும் வழங்கப்படும்.

1ம் கந்தாய வரி மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்பும்
2ம் கந்தாய வரி யூன் 30 ஆம் திகதிக்கு முன்பும்
3ம் கந்தாய வரி செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்பும்
4ம் கந்தாய வரி டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பும்
செலுத்தப்படல் வேண்டும்.

செலுத்தத் தவறின் வசிப்பிடங்கள், வெற்றுக்காணிகளுக்கு 15% உம் வியாபார நோக்கங்களுக்காக பாவிக்கப்படும் ஆதனங்களுக்கு 20% உம் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும்.எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31.01.2010 ஆம் திகதிக்கு மன் அந்தந்த உப அலுவலகங்களில் நிலுவையின்றி செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து சோலைவரிப் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**02.துவிச்சக்கர வண்டி, வளர்ப்பு நாய் உரிமம் பெறல் -2010**

2010 ஆம் ஆண்டு துவிச்சக்கர வண்டி,வளர்ப்பு நாய்களுக்கான உரிமத்தை பங்குனி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**03. வீடமைப்பு நகர அபிவிருத்தி கட்டளைச் சட்ட பிரிவு 268ன் பிரகாரமான அறிவித்தல்**

03.01 வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில்,மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள், கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதனை அறியத்தருகின்றேன். எனவே வலி தென்மேற்கு பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன்னனுமதி பெறப்படாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

03.02 ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

03.03 அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய குடியமர்வுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**04. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் 2010**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2010 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2010 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தினைப் பெற்று வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

**05. படவரைஞராக பதிவு செய்தல்**

2010ஆம் ஆண்டு பட வரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2010 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை செய்துகொள்ள அல்லது புதுப்பிக்க முடியும்.

**வலி தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**
**01.01.2010**

(C-4163)

**திருமதி.புஸ்பமலர் சிவலிங்கம்**
**செயலாளர்,**
**வலி.தென்மேற்கு பிரதேச சபை.**


## புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு

(தனங்கிளப்பு)

தனங்கிளப்பு மணற்காட்டு கந்தசாமி ஆலய புதிய நிர்வாக உறுப்பினர்கள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் தலைவராக சி.திருஞானசம்பந்தர், உப தலைவராக கு.சரவணபவன், செயலாளராக து.மாணிக்கவாசகர், பொருளாளராக க.கிருஷ்ணமூர்த்தி,போசகராக இ.சட்டநாதர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (6-4)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

19 வயதுக்குட்பட்ட பிரிவுக்கான பாடசாலை கிரிக்கெட் போட்டிக்கு மத்தியஸ்தம் வகிப்பது தொடர்பான அவசர கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தைச் சேர்ந்த சகல உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு சங்க செயலாளர் தெரிவித்துள்ளார். (6-4)

# தென்சூடானில் இடம்பெற்ற இன மோதல்களில் 140 பேர் பலி

தென்சூடானில் இடம்பெற்ற இன மோதல்களில் சுமார் 140 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சூடானில் மீண்டும் யுத்த சூழ்நிலை உருவாகியுள்ளதாக தொண்டு நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

நியூர் கோத்திர மக்களுக்கும் தின்டா கோத்திர மக்களுக்கும் இடையில் இந்த மோதல்கள் ஏற்பட்டுள்ளதாக சூடானின் சபினோ மாநில பிரதி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

நியூர் கோத்திர மக்கள் தின்டா கோத்திர மக்களைத் தாக்கி அவர்களுடைய கால்நடைகளைக் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கால்நடை வளர்ப்பு தொடர்பில் சூடானில் கோத்திரங்களுக்கு இடையில் நீண்ட காலமாகக் கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மிகவும் பின்தங்கிய கிராமங்களில் இவ்வாறான மோதல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2009ஆம் ஆண்டில் மட்டும் தென் சூடானில் கோத்திரங்களுக்கு இடையிலான மோதல்களில் சுமார் 2000இத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (6)

# குழந்தையின் மூளையைப் பதம் பார்த்த குச்சி; அப்புறப்படுத்தி டாக்டர்கள் சாதனை

## சீனாவில் சம்பவம்



(பீஜிங்)

ஷோங்டாங் பகுதியைச் சேர்ந்த 14 மாதமே நிரம்பிய லிஜிங் சாவ என்ற குழந்தை விளையாடியபோது மூக்கில் குத்திய குச்சி மூளையில் பதிந்தது. உயிருக்குப் போராடிய நிலையில் சத்திரசிகிச்சை செய்து டாக்டர்கள் குழந்தையைக் காப்பாற்றினர். ஷோங்டாங் பகுதியைச் சேர்ந்த லிஜிங்சாவ் கடந்த மாதம் 26ஆம் திகதி வீட்டில் சிறிய குச்சியை வைத்து விளையாடிக்கொண்டிருந்தான்.

அப்போது அவனது தாய் சமையலறையில் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் குழந்தை கீழே விழும் சத்தம் கேட்டு அவனது தாய் ஓடிவந்து பார்த்தார். நன்றாக விளையாடிக்கொண்டிருந்த குழந்த கதறி அழுது கொண்டிருந்தான். பதறிப்போன தாய் உடனடியாக உள்ளூர் ஆஸ்பத்திரிக்கு மகனை அழைத்துச் சென்றார். அங்கு நவீன கருவிகள் இல்லாததால் அவனுக்கு நேர்ந்த கதி குறித்து டாக்டர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. உடனே அவனது தாய் வாடகை காரில் குழந்தையுடன் பீஜிங் புறப்பட்டார்.

பத்து மணி நேர பயணத்திற்குப் பின் அங்குள்ள ஆஸ்பத்திரியில் குழந்தையைச் சேர்த்தார். டாக்டர்கள் பரிசோதித்தபோது குழந்தைக்குக் கடும் காய்ச்சலும் இதயத் துடிப்பு தாறுமாறாகவும் இருந்தது. உடனடியாக பரிசோதனை செய்தபோது குழந்தை விளையாடிக்கொண்டிருந்த குச்சி அவனது மூக்கில் நுழைந்து மூளையில் 4 மி. மீ. வரை பதிந்திருந்தது.

மூளை நரம்பியல் டாக்டர்கள் சத்திர சிகிச்சை செய்தபோது குழந்தையின் நிலைமை மோசமானது. சத்திர சிகிச்சை முடிவதற்குள் குழந்தைக்கு பக்கவாதம் ஏற்படும் அல்லது மரணமடையும் அபாய நிலை உருவானது. ஆனால் சிறிய அளிவில் இரத்தப் போக்கு மட்டுமே ஏற்பட்ட நிலையில் மூளையில் குத்திய குச்சியை டாக்டர்கள் அகற்றினர். அவன் உயிர்பிழைத்தது அதிர்ஷ்டமே. தற்போது காய்ச்சல் மட்டுமே உள்ளது. ஓரிரு நாளில் குணமடைந்து விடுவான் என டாக்டர்கள் கூறினர்.

பெற்றோர்களே! உங்கள் வீடுகளில் எவ்வளவுதான் வேலைகள் இருந்தாலும் குழந்தைகள் என்ன செய்கிறார்கள், எதைக் கையில் வைத்து விளையாடுகிறார்கள் என்பதை அடிக்கடி கண்காணித்தபடி இருங்கள். அப்படி செய்தால் இது போன்ற விபரீதங்கள் உங்கள் குழந்தைக்கும் ஏற்படாத வண்ணம் தடுக்கலாம். (2-6)

# புகை பிடித்தால் ஒரு கோடி அபராதம்

(டுபாய்)

புகைப் பிடிப்பது மற்றும் புகையிலைப் பொருட்களை விற்பதற்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ள ஐக்கிய அரசு எமிரேட் இந்தக் கட்டுப்பாடுகளை மீறுவோருக்கு ஒரு கோடி ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளின் அதிபர் ஷேக் கலிபா பின் சயீது புகைப்பிடிப்பது மற்றும் புகையிலைப் பொருட்களை விற்பதற்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்கும் புதிய சட்ட விதிமுறைகளில் கையெழுத்திட்டுள்ளார்.

இதன்படி பொது இடங்களில் புகைப்பிடிப்போர் மற்றும் 18 வயதிற்கு உட்பட்டோருக்குப் புகையிலைப் பொருட்களை விற்போருக்கு 1.2 கோடி ரூபாய் வரை அபராதமும் இரண்டு ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்படும்.

மேலும் புகையிலைப் பொருட்களை விற்பதற்கு வழங்கப்பட்ட உரிமமும் இரத்து செய்யப்படும். கபே போன்ற இடங்களில் புகையிலைப் பொருட்களை விற்பதற்கு உரிமம் அளிக்கப்படாது. 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இருக்கும் காருக்குள் மற்றவர்கள் புகைப்பிடிப்பதும் குற்றமாகக் கருதப்படும். அதேபோல் புகையிலைப் பொருட்கள் தொடர்பான விளம்பரங்களுக்கும் தடை விதிக்கப்படும். இவ்வாறு அரசு அறிவித்துள்ளது. (6)

# பொருட்களைக் கொள்வனவு செய்ய உதவும் புதிய ரோபோ



கடைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு உதவும் ரோபோவொன்றை ஜப்பானிய ரோபோ ஆராய்ச்சி நிறுவனமான ஏ.ரி.ஆர். வடிவமைத்துள்ளது.

''ரோபோவி II'' என்ற இந்த ரோபோவானது கடந்த வியாழக்கிழமை கடையொன்றில் பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத் தப்பட்டது.


இந்த ரோபோ கடைவாசலில் நின்று கடைக்கு வருபவரை வரவேற்பதுடன் அவரைப் பின்தொடர்ந்து அவர் கொள்வனவு செய்யும் பொருட்களைக் கூடையில் சேகரித்துக் கொள்கிறது. அத்துடன் அது கொள்வனவுப் பட்டியலிலுள்ள பொருட்களைக் கொள்வனவாளருக்கு ஞாபகப் படுத்துகிறது. பொருட்களைக் கொள்வனவு செய்யக் கடைகளுக்குச் செல்லும் வயோதிபர்களுக்கு உதவுவதை இலக்காகக் கொண்டே இந்த ரோபோ வடிவமைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. .(2-6)




# இரு பரிமாணங்களை மாற்றி முப்பரிமாணமாக்கும் தொலைக்காட்சி

## அமெரிக்காவில் கண்டுபிடிப்பு

இரு பரிமாணக் காட்சிகளுக்கான (2D) சமிக்ஞைகளை துல்லியமான முப்பரிமாணக் காட்சியாக (3D) மாற்றிக் காண்பிக்கக் கூடிய புதிய தொலைக்காட்சியொன்று அமெரிக்க லாஸ் வெகாஸில் இடம்பெற்ற இந்த ஆண்டுக்கான சர்வதேச பாவனையாளர் இலத்திரனியல் கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



“இஸட் எக்ஸ் 900 சீரிஸ் செல்” என்ற இந்தப் புதிய தொலைக்காட்சியானது 55 அங்குல மற்றும் 65 அங்குல திரைகளைக் கொண்டமைந்துள்ளது.

டொஷிபா இலத்திரனியல் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள மேற்படி தொலைக்காட்சி இந்த வருட இறுதியில் அமெரிக்கச் சந்தைகளில் விற்பனைக்கு விடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# வெளிநாட்டு அமைப்புக்களுடன் உறவு வைத்துக்கொள்ளக்கூடாது

## ஈரான் அந்நாட்டு மக்களுக்கு உத்தரவு

(ஈரான்)

வெளிநாட்டு அமைப்புக்களுடனான உறவுகளைத் துண்டிக்குமாறு ஈரான் அந்நாட்டு மக்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்த சில வெளிநாட்டுச் சக்திகள் முயற்சி மேற்கொள்வதாகவும் இவ்வாறான வெளிநாட்டு அமைப்புக்களைத் தடை செய்யத் தீர்மானித்துள்ளதாகவும் ஈரானிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும் ஆளும் கட்சியைக் கவிழ்க்க சதித் திட்டம் தீட்டப்பட்டு வருவதாக ஈரான் அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

ஈரானிய எதிர்க்கட்சி இணையத் தளங்கள், பி.பி.சி., உலக சேவை, அமெரிக்க ஊடக நிறுவனங்கள், ஊடக அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள் என 60 வெளிநாட்டு நிறுவனங்களை ஈரான் கறுப்புப் பட்டியல் இட்டுள்ளது.

குறித்த அமைப்புக்கள் நாட்டிற்கு எதிரான மென்மை போரைத் தொடுத்துள்ளதாக ஈரானிய பிரதிப் புலனாய்வு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பி.பி.சி. உலக சேவை, வொய்ஸ் ஒப் அமெரிக்கா, அமெரிக்க தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம், கிழக்கு ஐரோப்பிய ஜனநாயக அமைப்பு, மனித உரிமை கண்காணிப்பகம் ஆகியவை ஈரானில் இயங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்க கடற்படையின் புதிய ரக ஹெலிகொப்டர் தளம் கொண்ட கப்பல்..

# நிராகரிக்கப்பட்ட சம்பள கொள்கையையே அரசாங்கம் தற்போது அறிவித்துள்ளது

(கொழும்பு)

ஆசிரியத் தொழிற்சங்கங்களால் நிராகரிக்கப்பட்ட சம்பளக் கொள்கையொன்றையே அரசு மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளது. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சம்பள உயர்வானது அப்பட்டமான ஏமாற்று நடவடிக்கையாகும். எனவே வரும் 72 மணித்தியாலத்திற்குள் இதுதொடர்பில் உரிய விளக்கம் அளிக்கப்படாவிட்டால் நாடளாவிய ரீதியில் அறிவிக்கப்படாத தொழிற்சங்க நடவடிக்கைக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும் என்று நேற்றைய தினம் இலங்கை ஆசிரியர் சங்கம், கல்வி அமைச்சுக்கு எச்சரிகை விடுத்துள்ளதாகத் தெரிகிறது.

நாடு முழுவதிலும் உள்ள அரச பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் என மொத்தம் 2 இலட்சத்து 22 ஆயிரம் பேருக்கு 1005 ரூபா முதல் 2, 685 ரூபா வரையில் சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்திருந்தது.

அத்துடன், 06/2006 இன் அடிப்படையிலான சம்பள சுற்றறிக்கையின் பிரகாரமே இந்த சம்பள அதிகரிப்பும், அது தொடர்பிலான பிரச்சினைகளும் நிவர்த்தி செய்யப்படுவதாகவும் அறிவித்திருந்தது.

இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டார்லின் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிகிறது.

அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பானது, தேர்தலை நோக்கிய வேலைத் திட்டத்தில் ஒன்றாகும். இந்த சம்பளத்திட்டம் ஆசிரியத் தொழிற்சங்கங்களால் நிராகரிக்கப்பட்டது. அவ்வாறு நிராகரிக்கப்பட்ட ஒன்றையே அரசாங்கம் நடைமுறைப்படுத்தப் போவதாகக் கூறுகின்றது.

அதுமட்டுமல்லாது, பொதுச் சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளின் பிரகாரமே இந்தச் சம்பள அதிகரிப்புக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது.

இது அப்பட்டமான பொய்யாகும். பொதுச் சேவை ஆணைக்குழுவானது கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதியுடன் அதன் நடவடிக்கைகள் அனைத்தையும் இரத்துச் செய்துள்ளது. இந்நிலையில், அவ் ஆணைக் குழுவை மேற்கோள் காட்டி அறிவிக்கப்பட்டுள்ள இந்தச் சம்பள அதிகரிப்பானது சந்தேகத்தையே கிளப்பியுள்ளது.

மேலும், தற்போது வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்யையில் ஆசிரியத் தரத்தின் பெயர்களிலும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. மொத்தத்தில் இந்த சுற்றறிக்கை முறையற்ற விதத்திலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாங்கமும் கல்வியமைச்சும் இணைந்து ஆசிரியர்களையும் அதிபர்களையும் மீண்டும் மீண்டும் ஏமாற்றுவதற்கு எடுக்கின்ற நடவடிக்கைகளைக் கண்டிப்பதுடன், அறிவிக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பையும் நிராகரிக்கின்றோம்.

மேலும், சம்பள ஆணைக்குழுவின் ஆலோசனைகளின் பிரகாரம் எமக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள அதிகரிப்பையும் நிறுத்தப்பட்டுள்ள இடைக்காலக் கொடுப்பனவையும் வழங்கவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் என்று கூறியுள்ளார். (2-6)

# தமிழ்க்கைதிகள் விடுதலைக்கு நடவடிக்கை புலம்பெயர் குழுவினரிடம் ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, அண்மையில் அலரிமாளிகையில் சந்தித்த புலம்பெயர்ந்த தமிழ் புத்திஜீவிகள் குழுவினரிடம் ஜனாதிபதி மஹிந்த தெரிவித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த டாக்டர் நெய்ல் நடேசன், சவூதி அரேபியாவிலிந்து டாக்டர் இராஜசிங்கம் நரேந்திரன், லண்டனிலிருந்து இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த சந்திப்பில், டாக்டர் இராமநாதன் நரேந்திரநாதன் (அவுஸ்திரேலியா), மயில்வாகனம் சூரியசேகரம் (லண்டன்), சபாபதி சுப் பையா குக நாதன் (பிரா ன்ஸ்), இக் னேசியஸ் செல்லையா யோக நாதன் மனோ ரஞ்சன் (கனடா), முருகபூபதி (அவுஸ்திரேலியா) ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக புலம்பெயர்ந்த இந்த புத்தி ஜீவிகள் குழுவினர் மகஜர் ஒன்றைக் கையளித்ததுடன், அது தொடர்பாக நீண்டநேரம் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளனர்.

அதில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், வடக்கு கிழக்கின் கல்வி, அபிவிருத்தி திட்டங்கள், புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் தாயகம் வந்து செல்வதில் உள்ள சிக்கல்கள் போன்ற விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் தமிழர்களின் அதியுயர் பிரச்சினையான இப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, "எந்தத் தமிழர்களையும் தேவையில்லாமல் சிறையில் வைத்திருப்பது தமக்கு விருப்பமானதல்ல சட்டப்படியான விசாரணைகளை துரிதப்படுத்தி அவர்களை விடுதலை செய்யுமாறு ஏற்கனவே தான் நீதி அமைச்சின் செயலாளருக்கு பணித்திருப்பதாகவும் தெரிவித்தார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. (2-6)

# மாபெரும் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் பவளவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் மாபெரும் கலைவிழா இன்று சனிக்கிழமை கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய அரங்கில் நிலையத் தலைவர் வே. செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி பாஸ்கரன் குழுவினரின் நடனம், கைதடி பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையிலான மானாட மயிலாட நிகழ்வு, பாடகர் சுகுமார் அளிக்கும் ராகம்ஸ் இசைமாலை ஆகிய கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (6-4)


நன்மைகள்
















## வேலைவாய்ப்பு

ஜோன்கீல்ஸ் PLC யின் உறுதிப்பாட்டுடனும், பலத்தின் பின்னணியுடனும் இயங்கும் இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸின் புத்தாண்டிற்கான

## பதவி வெற்றிடங்கள்

யாழ் பிராந்திய கிளைக்கான (வடமராட்சி பிரதேசம் தவிர்ந்த) வேலையற்றவர்களுக்கான அரிய சந்தர்ப்பம்

- சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதிமுகாமையாளர்
- ↑ தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
- ↑ சிரேஷ்ட தனிப்பட்ட நிதி ஆலோசகர்
- ↑ தனிப்பட்ட நிதி ஆலோசகர்
- ↑ காப்புறுதி ஆலோசகர்

வன்னிப் பிரதேசத்தில் இருந்து வருகை தந்து தற்போது குடாநாட்டில் வசித்துவரும் வேலையற்று இருக்கும் இருபாலாரும் நேர்முகத்தேர்வுக்குத் தோற்றலாம்

உங்களது வாழ்க்கையை ஒளிமயமாக்க இன்றே இணையுங்கள் யூனியன் அஷ்யூரன்ஸில்

தகைமைகள்:- க.பொ. த. உயர்.தரத்தில் சித்தி (ஆகக் குறைந்த தகைமை)
காப்புறுதித்துறையில் அல்லது வியாபார மேம்படுத்தலில் முன்னனுபவம் விரும்பத்தக்கது (கட்டாயம் அல்ல)

### தகைமையுடன் உங்களிடம் நாம் எதிர்பார்ப்பது

→ உங்கள் இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
→ உங்கள் வெற்றியை நோக்கிப் பணிபுரிவதற்கான ஆர்வம்
→ திடசித்தம்


ஏன் தயக்கம் தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு சுயவிபரக் கோவையுடன்
நேர்முகத் தேர்வு:- காலம் : திங்கட்கிழமை (11.01.2010)
நேரம் : முற்பகல் 9.30 மணி
இடம் : யூனியன் அஷ்யூரன்ஸ் 139, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

தொடர்புகளுக்கு : 021 222 3753
077 9116282

காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
சோதி, றஜீவன், றொக்சன், உஷா

# பீடை நாசினிகளின் தோற்றமும் வகைகளும்




கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 9-XXVII

### போடோ கலவை

போடோ கலவை ஒரு சிறந்த பூஞ்சண நாசினி. இது கண்டுபிடிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை பயன்படுத்தப்படும் சிறப்புக்குரியது.

தேவையேற்படும் போது உடனேயே விளைநிலத்திலேயே தயாரித்து பயன்படுத்த முடியும். இதனை செப்பு சல்பேற்று ($Cu\ So_4$) உடன் சுண்ணாம்பைக் கலந்து தயாரிக்க முடியும். இந்த கலவையை 4-4-50 அல்லது 5-5-50 என்ற விகிதத்தில் தயாரித்துக் கொள்ள முடியும்.

இங்கே 4-4-50 என்பதில் 4 கிலோ செப்பு சல்பேற்று 4 கிலோ சுண் ணாம்பு இவ்விரண்டினையும் 50 லீற்றர் நீரில் கரைத்தெடுக்கும் கரைசலாகும். உடனேயே தயாரித்து பயன்படுத்துவதால் மேற்கூறிய விகிதத்திற்கேற்ப தேவையானளவிற்கு தயாரித்து பயன்படுத்தலாம்.

விகிதம் மாறாது நாசினியின் அளவைக் கறைத்து தயாரிக்கலாம். சரி சமமாக இரண்டு கொள்களன்களில் நீரை எடுத்து ஒரு கொள்கலனினுள் செப்பு சல்பேற்றினையும் மற்றையதினுள் சுண்ணாம்பையும் எடுத்து தனித்தனியாக இரண்டையும் நன்றாக கரைத்துக் கொள்ள வேண்டும்.



இப்போது சுண்ணாம்புக் கரைசலினுள் செப்பு சல்பேற்று கரைசலை ஊற்றி நன்றாக கலக்க வேண்டும். இறுதியாக இரண்டையும் எடுத்த் அள



விற்கேற்ற 4-4-50 விகிதத்துக்கான நீரின் அளவுக்கு கலந்த கரைசலை மீதி நீர் விட்டு தயாரிக்கவும்.

இப்போது போடோ கலவை தயார். இதனுள் சவர அலகு ஒன்றினை அமிழ்த்தினால் அதன் வெட்டும் பகுதியில் துருப் பிடிப்பது போன்ற மண்ணிறம் தோன்றக் கூடாது. அப்படி தோன்றினால் இன்னும் சுண்ணாம்பு கரைசலை சேர்த்து துருநிறம் தோன்றாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

இப்போது இக்கரைசலை தெளி கருவியினுள் வடித்து விட்டு விசிறலாம். மேலும் நீரினளவை குறைத்து பசைபோல ஆக்கினால் தாவரங்களை ஒட்டி வளர்ப்பவர்களும், மரங்களை கத்தரிக்கும் போது வெட்டுண்ட பகுதியினூடாக நுண்ணங்கிகள் சென்று நோயேற்படுத்தாது பாதுகாக்கலாம்.

துகள் பூஞ்சணங்களுட்பட அநேகமான பூஞ்சண நோயைக் கட்டுப்படுத்த போடோ கலவை சிறந்ததொரு பூஞ்சண நாசினி.

(தொடரும்)

# தூவல் நீர்ப்பாசனம் ஒரு பயன்தரும் பொறிமுறை

### தூவல் நீர்ப்பாசனம்

நீரானது உயர் அமுக்கத்தின் கீழ் பிளாஸ்ரிக் குழாய்கள் மூலம் பயிர்களின் மீது விசிறப்பட்டு குறித்த மேற்பரப்பு முழுவதும் சீராக ஈரலிப்பு ஏற்படக்கூடியவாறு மேற்கொள்ளப்படும் நீர்ப்பாசனம் தூவல் நீர்ப்பாசனம் எனப்படும். குடாநாட்டில் நீரின் தரத்தைப் பாதுகாக்கும் அதே நேரம் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்ட நீர் வளத்தைக் கொண்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ள நுண் நீர்ப்பாசன முறையான தூவல் நீர்ப் பாசனம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட விவசாயத்திணைக்களமானது முதன் முறையாக 2003 ஆம் ஆண்டு 08 தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகளை விவசாயிகளுக்கு வழங்கியது. பின்னர் பல வேறுபட்ட திட்டங்களிற்கூடாக 240 நீர்ப்பாசனத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது கமநெகும திட்டத்தின் கீழ் உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை, நல்லூர், கோப்பாய் மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 540 விவசாயிகளுக்கு தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகள் வழங்கப்படவுள்ளன. இத்தொகுதி ஒவ்வொன்றும் 1/4 ஏக்கர் விஸ்தீரணத்தில் செய்கை பண்ணப்படும் வெங்காயம், மிளகாய் மற்றும் மரக்கறிப் பயிர்களிற்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ள போதுமானதாகும்.

### தூவல் நீர்ப்பாசனத் தொகுதியின் நன்மைகள்

◆ பாத்திப் பாசனத்தில் பயன்படுத்தப்படும் நீரில் 40 வீதத்தினை இந் நீர்ப்பாசன முறையில் சேமிக்க முடியும். நீர் வெளியேற்றப்படும் வீதத்திற்கும் ஊறும் வீதத்திற்கும் இடையில் ஓர் சமனிலை பேணப்படுவதால், உவர் நிர் ஊற்றுக்கள் நன்னீரினுள் உட்புகுதல் குறைக்கப்படும்.

◆ பயிர்களுக்கு மழைவீழ்ச்சி போல நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படுவதால், பயிர்களிற்கிடையே ஓர் குளிர்மையான நுண்கால நிலை பேணப்படும். குறைந்த வெப்பநிலையானது பீடைகளின் தாக்கத்தைப் பெருமளவில் குறைக்கப்படுவதற்கு வழி வகுக்கும். உதாரணமாக வெங்காயம், மிளகாய் பயிர்களில் பனிப்பூச்சியின் தாக்கம் பெருமளவிற்குக் கட்டுப்படுத்தப்படும்.

அத்துடன் நீரை விசிறியடிக்கும் போது, பனிப்பூச்சி மற்றும் சிற்றுண்ணி போன்ற பீடைகள் பயிரின் மேற்பகுதியிலிருந்து கழுவியகற்றப்படுவதால், பொறிமுறை ரீதியான பீடைக்கட்டுப்பாடும் சாத்தியமாகின்றது.

◆ தூவல் நீர்ப்பாசனம் மூலம் தினமும் நீர்ப்பாசனம் மேற்கொள்ளல் வேண்டும். இதன் மூலம், மண் ஈரப்பதன் வயற்கொள்ளவில் பேணப்படும். எனவே பயிர்களிற்கு நீர்த்தகைப்பு ஏற்படாது.

இது தரமான மற்றும் உயர் உற்பத்தியைப் பெற வழி வகுக்கும். சுன்னாகம், உடுவில், சாவகச்சேரி போன்ற பகுதிகளில் தூவல் நீர்ப்பாசனத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட வெங்காயத்தில் 25 வீதம் அதிகரித்த விளைவைப் பெற முடிந்துள்ளது.

◆வெங்காயம் போன்ற பயிர்களில், பனி காலங்களில் பயிர்களின் இலைகளில் படிவடைந்த பனி, காலையில் சூரிய வெப்பத்தினால், ஆவியாகும் பொழுது நுனி கருகல் ஏற்படும். எனினும், தூவல் நீர்ப்பாசனம் அப்பனி நீரைக் கழுவிச் செல்வதால், நுனி கருகல் முற்றாகக் கட்டுப்படுத்தப்படும்.

◆தூவல் நீர்ப்பாசனத்தின் கீழ் பயிர்கள் செய்கை பண்ணப்படும் போது, நீர்ப்பாசன வாய்க்கால்கள் தேவையில்லை. இப் பகுதியிலும் பயிரினை நாட்ட முடியும். உதாரணமாக ஆயிரம் மிளகாய் கன்றுகள் பயிர் செய்கை பண்ணப்படுகின்ற எண்ணிக்கைத் தரையில் ஆயிரத்து 200 கன்றுகள் வரை பயிரிடப்பட முடியும்.

◆நீர்ப்பாசனத்திற்குத் தேவையான தொழிலாளர் கூலியை 30% வரையிலும் மற்றும் பாத்திகள் அமைத்தலுக்கான தொழிலாளர் கூலியை 50% வரையிலும் மீதப்படுத்த முடியும்.

◆பயிர்களின் வேர் வலயத்தில் 1/3 பங்கு மட்டுமே ஈரப்படுத்தப்படுகின்றது. இதனால், பயிர்களிற்கு இடப்படும் இரசாயன உரம் நிலத்தடி நீரிற்கு எடுத்துச் செல்லப்படுதல் கட்டுப்படுத்தப்பட்டு, வினைத்திறனான உரப் பாவனைக்கு வழிவகுக்கும். நிலத்தடி நீரின் தரமும் பாதிக்கப்படமாட்டாது.

◆பயிர்களிற்குத் தேவையான நீரின் அளவினை மட்டுமே மண்ணிற்கு வழங்கப்படுவதால், மண்ணில் உவர்த்தன்மை உருவாக்கப்படும் சாத்தியக் கூறுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

◆மண்ணரிப்புத் தடுக்கப்படுவதன் மூலம் மண்வளம் பேணப்படும்.

### தூவல் நீர்ப்பாசனத் தொகுதியினைத் தெரிவு செய்யும் போது கவனிக்கப்பட வேண்டியவை

◆ **மண்ணின் தன்மை**

தூவல் நீர்ப்பாசனமானது சகல வகை மண்களிற்கும் பாவிக்கப்படக்கூடியதாய் உள்ளது. தூவல் நீர்ப்பாசனத்தில் பயன்படுத்தப்படும் விசிறியின் விசிறல் அளவானது மண்ணின் ஊடுபுகவிடும் தன்மையினைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது. எப்பொழுதும் விசிறியின் விசிறல் அளவானது மண்ணின் ஊடுபுகவிடும் தன்மையினை விடக்குறைவாக இருத்தல் வேண்டும். கூடவாக இருப்பின் மேற்பரப்பினூடாக நீரானது வழிந்தோடி மண்ணரிப்பை ஏற்படுத்தும்.

◆ **பயிர்களின் வகை**

தூவல் நீர்ப்பாசனமானது வரிசையாகவும், அடர்த்தியாகவும் பயிரிடப்படும் பயிர்களான வெங்காயம், மிளகாய், கோவா, முள்ளங்கி, பீற்றூட், கறிமிளகாய், கீரைவகை, பயறு, கௌபீ போன்ற பயிர்களுக்கு வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட முடியும்.

**அமுக்கம்**

இத் தொகுதி உரிய முறையில் நீரை விசிறுவதற்கு 2 வளிமண்டல அமுக்கம் இருத்தல் வேண்டும். அமுக்கம் போதுமானதாக இல்லாவிடில் விசிறப்படும் நீர்த் துளிகளின் பருமன் பெரிதாக இருக்கும். சீரான நீர்ப் பரம்பல் இருக்காது. அத்துடன் மண் இறுக்கமடையும். றொபின் EY 20 மற்றும் 1.5 க்கு மேல் பரிவலுக் கொண்ட மின்சார நீர் இறைக்கும் பம்பி ஆகியன இவ் அமுக்கத்தை வழங்கக்கூடிய நீர் இறைக்கும் பம்பிகள் ஆகும்.

◆ **விசிறல் தலை**

விசிறும் தலைகள் தொகுதியின் பக்கக் குழாய்களில் 5.0 - 5.5 மீற்றர் இடைவெளிகளில் பொருத்தப்படல் வேண்டும். ஒரு பக்கக் குழாயில் 4-6 விசிறும் தலைகள் பொருத்தப்படல் வேண்டும். விசிறும் தலைகள் பயிரின் உயரத்திலும் பார்க்க 30-45செ.மீ உயரமாக இருத்தல் வேண்டும்.

இரு பக்கக் குழாய்களிற்கிடையேயான இடைவெளி 5.0 - 5.5 மீற்றராக இருத்தல் வேண்டும். எல்லா விசிறல் தலைகளும் ஒரே சீரான அமுக்கத்தில் நீரை விசிறக்கூடியவாறு பொருத்தப்பட வேண்டும். ஒரு தலையிலிருந்து விசிறும் நீர் மற்றைய தலை பொருத்தியுள்ள எல்லை வரை நீரை விசிறக்கூடியவாறு பொருத்தப்பட வேண்டும்.

ஒரு விசிறல் தலையானது 25-30.25 சதுர மீற்றர் விஸ்தீரணத்திற்கு நீர்ப்பாசனம் செய்யக்கூடியது. அந்த வகையில் 1/4 ஏக்கர் செய்கைக்குத் தேவைப்படும் விசிறும் தலைகளின் எண்ணிக்கை 32-36 ஆகும்.

600 லீற்றர் / மணி என்னும் வீதத்தில் நீரை விசிறியடிக்கும் விசிறல் தலையே எமது மண்ணிற்குப் பொருத்தமானது ஆகும்.

### நீர்ப்பாசனம் மேற்கொள்வதற்கு உகந்த காலம்

◆ காலை வேளைகளில் நீர் விசிறப்பட வேண்டும்.

◆ மண் சூடாக உள்ள போது விசிறக்கூடாது.

◆விசிறப்படும் நீர் சூடாக இருக்கக்கூடாது.

◆ பூக்கள் விரிந்து மகரந்தச் சேர்க்கை நடைபெறும் நேரங்களில் விசிறலைத் தவிர்த்தல் வேண்டும்.

◆ **நீர்ப்பாசன நேரம்**

நீர்ப்பாசன நேரம் மண்ணின் வகை. பயிரின் நீர்த் தேவையைப் பொறுத்து 15-20 நிமிடம் வரை நீர் விசிறப்படல் வேண்டும்.

◆ **நீர்ப்பாசன இடைவெளி**

தினமும் நீர் விசிறப்பட வேண்டும்.

**தூவல் நீர்ப்பாசனத் தொகுதியினை இயக்குவதற்கு முன் அவதானிக்க வேண்டியவை**

◆பொருத்துக்கள் சீராக இணைக்கப்பட வேண்டும்.

◆கசிவுகள், வெடிப்புக்கள் இருக்கக்கூடாது.

◆ கடும் காற்று வீசுமாயின் காற்றுத்தடை அமைக்கப்பட வேண்டும்.

**தூவல் நீர்ப்பாசனத் தொகுதி இயங்கும் போது அவதானிக்க வேண்டியவை**

◆விசிறும் தலைகள் சீராக இயங்குகிறதா என்பதை கவனிக்க வேண்டும்.

◆நீர்த்துளிகள் சிறிதாகவும் சீராகவும் பரவலாகவும் விசிறப்படுகின்றதா என்பதை கவனிக்க வேண்டும்.

◆ஒரு தலையிலிருந்து மற்றைய தலை வரை நீர் விசிறப்படுகின்றதா என அவதானித்தல்.

**பராமரிப்பு**

◆நீரின் தன்மையைப் பொறுத்து வடிகட்டியைத் துப்புரவு செய்தல் வேண்டும்.

◆ஒரு போக இடைவெளியில் நீர் வழங்கல் குழாயின் அந்தங்களிலுள்ள தலைமுனைகளை அகற்றி அவற்றினூடாக நீரை வெளியேற்றுவதன் மூலம் குழாய்களில் தேங்கியுள்ள படிவுகளை அகற்ற வேண்டும்.

◆ விசிறல் தலையில் சுண்ணாம்புப் படிவுகள் ஏற்பட்டு விசிறலுக்குத் தடையாக இருக்குமாயின் அவற்றை அகற்றுவதற்கு விசிறல் தலைகளைக் கழற்றி ஐதான வினாகிரி கரைசலில் அல்லது ஒரு வீத செறிவுள்ள ஐதான சல்பூரிக் அமிலத்தில் ஓர் இரவு ஊறவிடுவதன் மூலம் அகற்றலாம்.

எனவே இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய தூவல் நீர்ப்பாசனத் தொகுதியினை பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தி நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் மூலம் நிலைபேறான விவசாயத்திற்கு வழி வகுக்க முடியும். (முற்றும்)


வி.இளங்குமார்
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி)அலுவலகம்
யாழ்ப்பாணம்

> கெட்ட நடவடிக்கைகள் ஆரம்பத்தில் இன்பமாக இருந்தாலும் கடைசியில் கொடும் துன்பக் காட்டுக்குத் தான் அழைத்துச் செல்லும்.
>
> *~ கவி தாம்ஸன்*

வலம்புரி

## துட்டகைமுனுவின் பண்பாட்டின் துளியேனும் உங்களிடம் உண்டா?

எல்லாள மன்னனுடன் துட்டகைமுனு போரிடுகின்றான். வயது மூத்த எல்லாள மன்னன் போரில் மரணமடைகின்றான்.

தன்னுடன் நேருக்கு நேர் மோதி வீர மரணமடைந்த எல்லாள மன்னனுக்கு எல்லோரும் வணக்கம் செலுத்த வேண்டும் என்று கட்டளையிடுகின்றான் துட்டகைமுனு.

தன்னுடன் போரிட்டு வீர மரணமடைந்த மன்னன் எல்லாளனுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என்ற துட்டகைமுனுவின் கட்டளை சிறந்த வீரனுக்குரிய பண்பும் அழகும் ஆகும்.

துட்டகைமுனுவின் பரம்பரை என்று மார்தட்டிக் கூறுவது மட்டும் பெருமைக்குரியதாகாது. மாறாக துட்டகைமுனுவின் உயர் பண்பாட்டுப் பெறுமானங்களையும் கடைப்பிடிக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளுடன் போர் நடத்தியமை, அந்த போரில் அரசு வெற்றியீட்டிமை என்பதற்குள் 'பழிவாங்கல்' படலம் தொடர்வது அரசுக்கும், கௌதம புத்தபிரானின் போதனைக்கும் அழகாகாது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அரசுக்கு எதிராகப் போரிட்டவர். எனவே அவர் குற்றவாளி என அரச தரப்பால் குற்றம் சுமத்த முடியும்.

அதற்காக பிரபாகரனின் தந்தையையும், தாயையும் இராணுவத்தடுப்பு முகாமில் அடைத்து வைப்பதென்பது நீதியாகாது.

86 வயது நிரம்பிய பழுத்த முதியவரை இராணுவத் தடுப்பு முகாமில் அடைத்து வைத்து அங்கேயே அவர் மரணமடைந்தார் என்ற பழிச்சொல்லுக்கு இலங்கை அரசும்-சிங்கள மக்களும் ஆளாகியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை, தாய் என்ற பார்வையை விடுத்து 86 வயது நிரம்பிய அரச ஓய்வூதியர் ஒருவரை இராணுவத் தடுப்பு முகாமில் அடைத்து வைப்பது மனித நேயமான செயலா? என்பதை சிங்கள் மக்கள் ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ளவேண்டும்.

பிரபாகரனின் பெற்றோர் என்பதற்காக தள்ளாடும் வயதிலும் அவர்களை இராணுவ தடுப்பு முகாமில் அடைத்து வைப்பதென்பது இலங்கையில் இரக்கம் இறந்து விட்டதென்பதற்கான அடையாளமாகும்.

மூத்தவர்களை கனம் பண்ணுவோம். மூத்த பிரஜைகளை வணங்குவோம் என்று பள்ளி மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்குமாறு அறிவுரை தரும் அரசு, முதலில் அதனை தான் படிக்க வேண்டும்.

வன்னியுத்தம்; அதில் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பு என்ற வரலாற்றின் பதிவில், பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளை அவர்களை இராணுவ தடுப்புமுகாமில் அடைத்து வைத்து அங்கேயே அவர் உயிரிழந்தார் என்ற செய்தி இதற்கு துணை போனவர்களையும், சிங்கள மக்களையும் நிச்சயம் நெகிழவைக்கும்.

இந்த நாட்டில் இன ஒற்றுமை பற்றி பேசும் போதெல்லாம் திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்கள் தனது 86ஆவது வயதில் பனாங்கொடை இராணுவத் தடுப்பு முகாமில் உயிரிழந்தார் என்ற வரிகள் முடிச்சுக்களாகவே இருக்கப்போகின்றன.

# மாவட்ட, பிரதேச, கிராம மட்டங்களில் டெங்கு கட்டுப்பாட்டுக்குழு அமைப்பு

தற்போது யாழ். மாவட்டத்தில் தீவிரமாகப் பரவி வரும் டெங்கு நோய் பரம்பலை கட்டுப்படுத்த டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் நோக்குடன் மாவட்ட, பிரதேச, கிராம மட்ட டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்கள் அமைக்க தீர் மானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் டெங்கு நோய் கட்டுப்பாட்டுக்குழு மாவட்ட, பிரதேச, கிராம மட்டங்களில் தெரிவு செய்யப்பட்டுள்ளது அவைகளின் விபரம் வருமாறு;

**மாவட்ட டெங்கு கட்டுப்பாட்டுக் குழு**

தலைவர்-அரசாங்க அதிபர், செயலாளர்-பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், உறுப்பினர்கள்- பணிப்பாளர் போதனா வைத்தியசாலை, பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி, ஆணையாளர் மாநகரசபை, மலேரியா தடை வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரிகள், பாதுகாப்புபடை பிரதிநிதிகள் (இராணுவம், பொலிஸ், கடற்படை), அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், பிரதம பொறியியலாளர் வீதி அபிவி ருத்தி அதிகார சபை, பிரதம பொறியியலாளர் வீதி அபிவிருத்தி திணைக்களம்.

**பிரதேச கிராம மட்ட டெங்கு கட்டுப்பாட்டு குழு**

தலைவர்-பிரதேச செயலாளர், செயலாளர்-சுகாதார வைத்திய அதிகாரி, உறுப்பினர்கள்-உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், பொதுசுகாதார பரிசோதகர்கள்,வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,கோட்டக்கல்வி பணிப்பாளர், வைத்தியசாலை பொறுப்பதிகாரிகள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச மட்ட திணைக்களங்களின் தலைவர்கள், இராணுவ/பொலிஸ் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள்.

**கிராம மட்ட டெங்கு கட்டுப்பாட்டு குழு**

தலைவர்-கிராம சேவை உத்தியோகத்தர், செயலாளர்-பொது சுகாதார பரிசோதகர், உறுப்பினர்கள்- சமுர்த்தி உத்தியோகத்தர், குடும்ப நல உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதி, மாதர் அபிவிருத்தி சங்க பிரதிநிதி, சன சமூக நிலைய பிரதிநிதி, விளையாட்டுக்கழக பிரதிநிதி, ஆலய பரிபாலன சபை பிரதிநிதி, பாடசாலை அதிபர்கள்.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிற்கும் தனியான கிராம மட்டகுழு அமைக்கப்பட வேண்டும்.

**இவர்களின் செயற்பாடு**

- ◆ டெங்கு நோய் பரம்பல் கட்டுப்பாட்டிற்குள் வரும்வரை வாரம் ஒரு தடவை கூடி டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை கண்காணித்து ஒருங்கிணைக்க வேண்டும்.
- ◆ டெங்கு சுத்திகரிப்பு பணிகளை ஏற்பாடு செய்தல்
- ◆ டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகட்கு வேண்டிய வளங்களைப் பெற்றுக்கொடுத்தல்
- ◆ டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகட்கு ஆலோசனை வழங்கல்
- ◆ டெங்கு விழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தல்.

எனவே சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் உடனடியாக இக்குழுக்களை அமைத்து வாராந்த கூட்டங்களை டெங்கு பரம்பல் கட்டுப்பாட்டிற்குள் வரும்வரை நடத்த வேண்டும். டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை கண்காணித்து ஒருங்கிணைக்க வேண்டும் எனவும் யாழ். அரச அதிபர் க.கணேஷ், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கூட்டாக அறிவித்துள்ளனர். (ச)

# சகோதரனுக்கு இழைக்கப்பட்ட அநீதியே அவர் எதிரணிக்குச் செல்ல காரணம்

## நவீன் திஸாநாயக்க

அரசாங்கத்தினால் இழைக்கப்பட்ட அநீதியே எனது சகோதரனான மயந்த திஸாநாயக்க எதிர்க்கட்சிகளின் கூட்டணியில் இணைந்து ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதற்கான பிரதான காரணமாகும்.

இதனால் இவரை தேசத்துரோகியென்று வர்ணிப்பார்களாயின் அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பேன்.

எதிர்வரும் நாட்களில் மக்களுக்கான அரசாங்கத்தின் சேவையில் திருப்தியில்லாவிடின் தீர்க்கமான அரசியல் தீர்மானங்களை எடுக்க ஒருபோதும் நான் பின்னிற்கப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் நவீன் திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்;

தேர்தல் நேரங்களில் கட்சி மாறுவது என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதொன்றல்ல. எனது சகோதரன் மயந்த திஸாநாயக்க கட்சி மாறுவது தொடர்பாக நானோ எனது தாயாரோ இறுதி வரை அறிந்திருக்கவில்லை.

ஆனால் அண்மையில் அரசாங்கத்தினால் இழைக்கப்பட்ட அநீதியும் அதனால் ஏற்பட்ட மனக்கசப்புமே மயந்த திஸாநாயக்க எதிரணியில் இணையக் காரணமாக அமைந்தது என்றார். (2-6)

# இவ்வருட சிவராத்திரி விரதம் எப்போது? இந்து மாமன்றம் விளக்கம்

(கொழும்பு)

இவ்வருட சிவராத்திரி விரத தினம் இரு பஞ்சாங்கங்களிலும் வெவ்வேறாகக் காணப்படுவதால் இந்து மக்கள் பலர் குழப்பமடைந்த நிலையிலுள்ளார்கள்.

இதுகுறித்து அகில இலங்கை இந்து மாமன்றம் விடுத்துள்ள செய்தியில்;

இவ்வருடம் மார்ச் 13 ஆம் திகதியன்றே மகாசிவராத்திரி என்பதை அரசாங்கம் குறிப்பிட்டு,அதனை அரச விடுமுறையாக பிரகடனம் செய்வதற்கு முன்பதாகவே, இந்து மாமன்றம் சமய அறிஞர்கள் பலருடன் இதுபற்றி கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது. இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படியும் இந்தியாவிலுள்ள திருவண்ணாமலை , இராமேஸ்வரம், சிதம்பரம் போன்ற திருத்தலங்களில் மகா சிவராத்திரி பூசை வழிபாடுகள் நடத்தப்படும் தினத்தையும் கவனத்தில் கொண்டும் மார்ச் 13 ஆம் திகதியன்றே மகா சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பது பொருத்தமானது என்று இந்து மாமன்றம் வலியுறுத்தியி ருந்தது.

அத்துடன் 2010 ஆம் ஆண்டுக்குரிய அரச விடுமுறை தினங்களை கணிப்பது தொடர்பாக பதிவாளர் நாயகத்தால் 2009 மே மாதம் நடத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்த அகில இலங்கை இந்து மாமன்றப் பிரதிநிதியாலும் இதே கருத்து முன்வைக்கப்பட்டது.

எனவே மார்ச் 13 ஆம் திகதி சனிக்கிழமையன்றே மகா சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்பதை அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றது எனக் கூறப்பட்டுள்ளது. (2-6)

# யாழ். மாநகரசபையின் விசேட செயலணி மூலம் துப்புரவு பணிகள்

(யாழ்ப்பாணம்)

வெற்றுக்காணிகள், பொது இடங்கள் போன்றவற்றில் வளர்ந்துள்ள பற்றைகளை வெட்டுவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் யாழ்.மாநகர சபை விசேட செயலணியின் தொழிலாளர்கள் மூலம் அப்பகுதியினைச் சுத்தம் செய்வதற்கு உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள ஆயத்தமாகவுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

இதேவேளை வீதிகளில் கொட்டப்படும் குப்பைகள் தொடர்பாக பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை மாநகர சபையின் அலுவலகத் தொலைபேசி இலக்கமான 021-222 2275 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் எனவும், உடனடியாக அப்பகுதிக்குத் தொழிலாளர்கள் அனுப்பப்பட்டு குப்பைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் குறிப்பாக கால்வாய்களில் கழிவுகள் போடுவதனை தவிர்ப்பதற்கு பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என மாநகர முதல்வர் மேலும் தெரிவித்துள்ளார். (6-30)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## கல்வியும் சமுதாயமும்



புதிய இந்தியா ஒரு புறம் சொல்கிறது: மேலை நாட்டுக் கருத்துக்கள், மொழி, உணவு, உடை, நடைமுறைகள் ஆகியவற்றை நாம் பின்பற்றினால்தான், மேலை நாட்டினரைப் போன்று நாமும் உறுதியும் ஆற்றலும் உடையவர்கள் ஆவோம்.

மறுபுறம் பழைய இந்தியா சொல்கிறது : முட்டாள்கள்! மற்றவர்களுடைய கருத்துக்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுவதனால் ஒருநாளும் அவை ஒருவனுக்குச் சொந்தமாகிவிடா. உழைத்துப் பெற்றாலன்றி எதுவும் உனக்குச் சொந்தமாகிவிடாது. புலியின் தோலைப் போர்த்துக் கொண்ட பசு, புலியாகிவிடுமா?



யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட லயன் வைத்திய கலாநிதி வை. தியாகராஜா, சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொர்ணட கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்கராசா மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ. குகதாசன் ஆகியோர் பாண்ட் வாத்திய குழு சகிதம் விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதையும் பிரதம விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர் ஆகியோர் மாணவர்களுக்கு விருது வழங்கி கௌரவிப்பதையும் அருகில் வித்தியாலய அதிபர் மு. முரளிதரன் நிற்பதைப் படங்களில் காணலாம்.

## மதவாச்சி-தலைமன்னார் இடையில் ரயில் சேவைகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

போர் நெருக்கடி காரணமாகப் பாதிக்கப்பட்ட மதவாச்சி – தலைமன்னார் இடையிலான ரயில் சேவைகளை மீள ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் பி.பி.விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதன்படி 106 கிலோ மீற்றர் நீளமான ரயில் பாதைகள் மீளமைக்கப்படவுள்ளது எனவும் இதற்கான ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளதோடு இந்திய கம்பனியொன்றினூடாக நிர்மாணப் பணிகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் பொது முகாமையாளர் கூறினார்.

தலைமன்னாருக்கான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படுவதோடு இரு கடுகதி ரயில்களைச் சேவையில் ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளது எனவும் தேவையான ரயில் பெட்டிகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக இந்தியாவுடன் பேசி வருவதாகவும் அவர் கூறினார். (6)

## இலங்கைத் தூதரக அதிகாரிகள் விடுமுறையிலேயே வந்துள்ளனர்

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளிலுள்ள சில இலங்கைத் தூதரக தலைவர்களும் அதிகாரிகளும் தனிப்பட்ட விடுமுறையிலும் கலந்துரையாடல்களில் கலந்து கொள்வதற்காகவுமே இலங்கை வந்துள்ளனர் என் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் சேவைபுரியும் சில தூதரக தலைவர்களும் அதிகாரிகளும் தேர்தல் சார்பான வேலைகளையிட்டு நாட்டிற்கு வந்துள்ளனரென வெளியான செய்திகள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சு விளக்கமளிக்கும் வகையில் இதனைத் தெரிவித்துள்ளது.

அதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

சில தூதரக தலைவர்கள், மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் தங்களது பணியை மேற்கொள்வதற்கு அவசியமான தற்காலிக ஒழுங்குகளை ஏற்பாடு செய்து விட்டு விடுமுறை காலத்தில் தங்களது தனிப்பட்ட விடுமுறையில் வந்துள்ளதுடன் மிகுதி ஒரு சிலர் சம்பந்தப்பட்ட விடயங்கள் சம்பந்தமான கலந்துரையாடல்களின் பொருட்டு கொழும்பிலிருக்கும்படி கேட்கப்பட்டிருந்தனர்.

கலந்துரையாடலின் பொருட்டு கொழும்பிற்கு வருகை தரும்படி கோரப்பட்டோரினருக்கான விமான சீட்டு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்டது என ஊடக செவ்விகளில் கூறப்பட்டிருந்தது.

எனினும் இவர்கள் கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில் அவர்களுக்கு ஏதும் கொடுப்பனவுகளோ அல்லது அவர்களைப் பேணும் வசதிகளையோ வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஒழுங்கு செய்யவில்லை.

தற்பொழுது இலங்கையிலுள்ள தூதரக தலைவர்கள் அவர்களது விடுமுறை முடிந்ததும் நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்வர் என மேலும் அறிவித்துள்ளது. (2-6)

## ஹைகோர்ப் நிறுவனத்தின் பணிப்பாளர் கைது

எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகனுக்குச் சொந்தமான ஹைகோர்ப் நிறுவனத்தின் பணிப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை இராணுவத்தையும் மக்களையும் ஏமாற்றும் வகையில் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்த குற்றத்திற்காகவே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் குறித்த பணிப்பாளர் கைது செய்யப்பட்டு கொழும்பு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் தெரிகிறது.

நிதி மோசடி இடம்பெற்றுள்ளதனால் பொது மக்களின் சொத்து துஸ்பிரயோக வழக்கின் அடிப்படையில் குறித்த நபருக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளதோடு அவர் பயன்படுத்திய கணனி உள்ளிட்ட உபகரணங்கள் விசாரணைக்காக கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது

### அமைச்சர் மஹிந்த சமரசிங்க



(கொழும்பு)


மீள் குடியேற்றத்துக்கான இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது என இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வவுனியா நலன்புரி முகாம்களில் 79 ஆயிரத்து 965 பேர் தங்கியுள்ளனர். மேலும் யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 349 பேர் தங்கியுள்ளனர். இதேவேளை வைத்தியசாலைகளில் ஆயிரத்து 626 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதன்படி இன்னும் மீள் குடியேற்றத்துக்கு 82 ஆயிரத்து 940 பேர் மாத்திரமே உள்ளனர் என்று அமைச்சர் குறிப்பிட்டார். இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை முன்னர் 2 இலட்சத்து 70 ஆயிரமாக இருந்ததாகவும் தற்போது அவர்களில் ஒரு இலட்சத்து 69 ஆயிரத்து 891 பேர் மீளக் குடியேற்றப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக் காட்டினார். (2-6)

## டெங்கு நோயின் அபாயம்



சுற்றுச் சூழல் அசுத்தமாதல் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக அமைகின்றது. தற்போது டெங்கு நோயின் தாக்கம் மிக அதிகரித்துக் காணப்படுகின்றது. மேலும் டெங்கு நோயினால் இறப்போர் தொகையும் அதிகரித்துள்ளது.

இதனால் சுற்றுச்சூழலை நுளம்புகளின் பெருக்கத்திற்கு உகந்ததாக வைத்திருத்தல் தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்கப்பட்டுப் பலருக்குத் தண்டமும் அறவிடப்பட்டுள்ளது. இருந்தபோதும் டெங்கு நோயின் தாக்கம் குறைந்தபாடாக இல்லை.

உலகில் பொருளாதார நிலையில் ஏற்பட்ட தளம்பல், சூழல் வெப்பமடைதல் என்பன டெங்கு நோயின் பரம்பலில் மறைமுகக் காரணிகளாக அமைகின்றன. பொருளாதாரத் தளம்பல் பல கட்டங்களை அரைகுறையாக நிற்கவைத்துள்ளது.

பணம் கொடுத்துக் கழிவுகளைச் செவ் வனே அகற்றும் செயல்கள் சனத்தொகை கூடிய நகரங்களில் தடைப்பட்டுள்ளது.

இதனால் நீரோடும் காண்களில் கழிவுகள் தேங்கி, நீரோட்டம் தடைப்பட்டு நுளம்புகள் பெருகும் இடங்களாக உள்ளன. மேலும் சூழல் வெப்பமடைவதால் ஏற்படும் காலநிலை மாற்றங்களாற் சீரற்ற மழை வீழ்ச்சிகள் ஏற்படுகின்றது. இவையும் நுளம்புப் பரவலுக்கு ஏதுவாக அமைகின்றன.

எனவே, சூழலில் நுளம்புகளின் செறிவு அதிகரித்து உள்ளமையைச் சராசரியாக எமக்குத் தினமும் கடிக்கும் நுளம்புகளின் எண்ணிக்கையில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

இதனால் டெங்குக் கிருமிகளைக் காவும் நுளம்புகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். எனவே டெங்கு நோயின் தாக்கம் கூடும். அடுத்து பொருளாதாரத் தேக்கம் காரணமாகச் சராசரியாகப் போசாக்கு மிக்க உணவுகளை உள்ளெடுத்தல் குறைவடைந்து காணப்படும். இதனால் நோய் எதிர்ப்புச் சக்தி ஒருவரிற்கு சராசரியாகக் குறைந்து காணப்படும். இதனால் டெங்கு நோயினை எதிர்கொள்ள முடியாது இறப்பு ஏற்படும். எனவே டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு எமக்கு மிக அவசியமானது.

இதில் முக்கியமானது சூழலில் மழைநீர் தேங்கக்கூடிய இடங்களை அதாவது நுளம்புகள் பெருகுவதைத் தடுத்தல் ஆகும்.

"நகரத்தில் நரகம் காண்பின் நரகத்தில் நகரம் காண்பீர்"

வைத்திய கலாநிதி சி. எஸ். யமுனானந்தா.

## மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம் நெல் குற்றும் ஆலையொன்றை ஆரம்பிக்கவுள்ளது

(பொன்னாலை)

மானிப்பாய் பல.நோ. கூட்டுறவுச் சங்கம் மக்களின் நலன் கருதியும் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடனும் நெல் குற்றும் ஆலையொன்றை ஆரம்பிக்கவுள்ளது.

பல மாதங்களுக்கு முன் சங்க மண்டபத்தில் நடைபெற்ற பொதுச் சபைக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாகவே இந்த அரிசி ஆலை நிறுவப்பட்டுள்ளதாகவும் இதற்கான ஒழுங்குகளை சங்க நிர்வாகம் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வருமானங்களை ஈட்டக் கூடிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வரும் சங்க நிர்வாகம் சமுர்த்தி முத்திரைக்கு வழங்கப்படும் அரிசியை குடாநாட்டிலுள்ள 24 சங்கங்களுக்கும் வழங்கி வருகிறது.

மேலும் அரசாங்க அதிபரின் அனுமதியுடன் இவ்வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி கோதுமை மாவை வழங்குவதற்கான ஒழுங்குகளையும் சங்க நிர்வாகம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4-49)

# யாழில் டெங்கு நோய் பரம்பல் தீவிரம்; கட்டுப்படுத்த ஒத்துழைப்பு அவசியம்

## யாழ்.அரச அதிபர், சுகாதாரப் பணிப்பாளர் கூட்டாக வேண்டுகோள்





**யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் பரம்பல் அதிகரித்துள்ளதையடுத்து அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து யாழ்.அரச அதிபர் க.கணேஷ், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**

யாழ்.மாவட்டத்தில் 2009 டிசம்பர் மாத நடுப் பகுதியிலிருந்து டெங்கு நோய் பரம்பல் தீவிரமடைந்துள்ளது.

இதுவரை ஏறத்தாழ 500 டெங்கு நோயாளிள் இனங்காணப்பட்டுள்ளனர். இதனால் 14 இறப்புகளும் ஏற்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் தற்போது மழை காலம் தொடர்வதால் எதிர் வரும் வாரங்களில் டெங்கு நோயின் பரம்பல் மேலும் அதிகரிக்கலாம்.

தற்போது யாழ்.மாவட்டத்திற்கான தரைவழிப் பாதை திறக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக்கும் தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் தினமும் ஏராளமான மக்கள் வந்து செல்கின்றனர்.

இத்தகைய சூழலில் யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவ வாய்ப்புள்ளது. எனவே காலம் தாழ்த்தாது உடனடியாக டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை முழு வீச்சில் முன்னெடுக்க வேண்டியது இன்றைய காலத்தின் அவசர தேவையாகும்.

டெங்கு நோயை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப் பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பாடசாலைகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்.

**டெங்கு தடுப்பு நடவடிக்கைகள்**

01. சகல வைத்தியசாலைகளிலும் நுளம்பு பெருகும் இடங்களை அழிக்கும் சுத்திகரிப்புப் பணி இடம் பெற வேண்டும். இதற்கென சிரமதானங்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். (பொறுப்பு-வைத்தியசாலை பொறுப்பதிகாரிகள்)

02. சகல திணைக்கள/நிறுவன வளவுகளிலும் சிரமதான அடிப்படையில் சுத்திகரிப்புப் பணி இடம் பெற வேண்டும். (பொறுப்பு-திணைக்கள/நிறுவனத் தலைவர்கள்)

03. பொது இடங்களில் நுளம்பு பெருகும் இடங்களையும் தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களையும் துப்புரவு செய்ய வேண்டும். (பொறுப்பு-உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள்)

04. திண்மக் கழிவுகள் கிரமமாக உரிய முறையில் அகற்றப்பட வேண்டும். (பொறுப்பு-உள்ளூராட்சி மன்றச் செயலாளர்கள்)

05. பாடசாலைகளில் சிரமதான அடிப்படையில் சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். (பொறுப்பு- பாடசாலை அதிபர்கள்)

06. ஒவ்வொரு வீட்டிலும் நுளம்பு பெருகக் கூடிய கொள்கலன்கள் அழிக்கப்பட்டு சுத்திகரிப்புப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். (பொறுப்பு-வீட்டு உரிமையாளர்கள்/குடியிருப்பாளர்கள்)

07. கிராம மட்டத்தில் நுளம்பு பெருகும் இடங்களையும் தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களையும் கிராமத்தில் உள்ள பொதுமக்கள் துப்புரவு செய்ய வேண்டும். (பொறுப்பு-கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள்)

08. மேற்படி சுத்திகரிப்புப் பணிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி பொது சுகாதார பரிசோதகர்கள் மேற்பார்வை செய்வார்கள். (பொறுப்பு-சுகாதார வைத்திய அதிகாரிகள்)

09. டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு சுகாதார வைத்திய அதிகாரிகள்/பொது சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்படும். பாடசாலைகளில் காலை ஒன்று கூடலில் இதற்காக நேரம் ஒதுக்கப்பட வேண்டும். (பொறுப்பு-சுகாதார வைத்திய அதிகாரிகள்/பொது சுகாதார பரிசோதகர்கள்/ பாடசாலை அதிபர்கள்)

10. சகல வைத்தியசாலைகளிலும் நோயாரை நுளம்புக் கடியிலிருந்து பாதுகாக்க நுளம்பு வலைகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். (பொறுப்பு- வைத்தியசாலை பொறுப்பதிகாரிகள்)

11. டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு கருத்தரங்குகளை ஒழுங்கு செய்ய வேண்டும். (பொறுப்பு-உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள்)

12. பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் தத்தமது பிரிவிலுள்ள வீடுகளுக்கு வீட்டுத் தரிசிப்பிற்கு செல்லும் போது நுளம்பு பெருகும் இடங்களை இனங்காட்டி அழிக்க ஆலோசனை வழங்க வேண்டும். (பொறுப்பு-பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள்)

13. யாழ்.மாவட்டத்திலுள்ள சகல நலன்புரி நிலையங்களிலும் சுகாதாரக் குழுக்கள் அமைக்கப்பட்டு சிரமதான அடிப்படையில் சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். (பொறுப்பு-சுகாதார வைத்திய அதிகாரிகள், நலன்புரி நிலைய பொறுப்பதிகாரிகள்)

14. யாழ்.மாவட்டத்தில் பல காணிகள் கைவிடப்பட்ட நிலையில் பராமரிப்பின்றி பற்றைக்காடாகக் காட்சி அளிக்கின்றன.

இவற்றில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாக வாய்ப்புண்டு. எனவே இக் காணிகளின் உரிமையாளர்கள் அல்லது பராமரிப்புக்குப் பொறுப்பாக உள்ளவர்கள் உடனடியாக இக் காணிகளைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறினால் உள்ளூராட்சி மன்றங்கள் பொருத்தமான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். (பொறுப்பு-உள்ளூராட்சிமன்ற செயலாளர்கள்)

15. தற்போது இலங்கையில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தக் கடுமையான புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருக உடந்தையாக இருப்பவர்கட்கு அபராதமும் சிறைத் தண்டனையும் வழங்கப்படலாம். ஆனால் நாம் சட்டத்தின் உதவியின்றி பொதுமக்களின் ஒத்துழைப்புடனேயே இங்கு டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க விரும்புகின்றோம்.

ஆனால் இதற்கு ஒத்துழைப்பு வழங்காது டெங்கு நோய் பரவ உடந்தையாக இருப்பின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். (பொறுப்பு-சுகாதார வைத்திய அதிகாரிகள்)

16. ஒவ்வொருவரும் முன்னெச்சரிக்கையாக தத்தமது பாதுகாப்பு முன் நடவடிக்கைகளை மேற்கொண்டால் டெங்கு நோயை துரிதமாகக் கட்டுப்படுத்தலாம்.

**'யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயைத் தடுக்க அனைவரது ஒத்துழைப்பும் மிக அவசியம்'**

# தரங்க-மஹேலே சதம் அடித்தனர்; இலங்கை அணி இலகு வெற்றி



தரங்க-ஜெயவர்த்தன ஜோடி சதம் அடிக்க இலங்கை அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி முத்தரப்பு ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டிக்கு முதலாவது அணியாக முன்னேறியது.

பங்களாதேஷ், இலங்கை மற்றும் இந்திய அணிகள் மோதும் முத்தரப்பு ஒரு நாள் தொடர் பங்களாதேஷில் நடைபெறுகின்றது. இத் தொடரில் நேற்று மிர்பூரில் நடைபெற்ற 4-வது போட்டியில் இலங்கை-பங்களாதேஷ் அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 249 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித் தலைவர் சகீப் அல் ஹசன் 47 ஓட்டங்களையும் ரகிபுல் ஹசன் 43, ஹயிஸ் 42 ஓட்டங்களையும் ரகீம் 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் குலசேகர, ரான்டீவ் மற்றும் பெரேரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் துஷார ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தரங்க-ஜெயவர்த்தன ஜோடியின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் 42.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 252 ஓட்டங்களைக் குவித்து 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலகுவாக வெற்றி பெற்றது.

இதில் உப்புல் தரங்க ஆட்டமிழக்காமல் 126 பந்துகளில் (18 பவுண்டரிகள் உட்பட) 118 ஓட்டங்களையும் மஹேலே ஜெயவர்த்தன 117 பந்துகளில் (13 பவுண்டரிகள் உட்பட) 108 ஓட்டங்களையும் அணித் தலைவர் குமார் சங்கக்கார ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்து வீச்சில் இஸ்லாம் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இப்போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு இறுதி வரை துடுப்பாட்டத்தில் ஒத்துழைத்த தரங்க ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் தொடரின் 12 புள்ளிகளைப் பெற்ற இலங்கை அணி இறுதிப் போட்டிக்கு முதலாவது அணியாக முன்னேறியது. இத் தொடரில் 5-வது போட்டியில் இலங்கை-இந்திய அணிகள் நாளை மோதுகின்றன.

## 'டெங்கு' ஒழிப்புப் பணி

# களத்தில் இறங்குகின்றனர் யாழ்.பல்கலை மாணவர்கள்

டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அமைவிடத்திலிருந்து 6 கிலோமீற்றர் சுற்றளவு வரையான இடங்களைத் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபடவுள்ளனர்.

இன்று காலை 7.30 மணிக்கு இப் பணி முன்னெடுக்கப்படவுள்ளது. டெங்கு வேகமாகப் பரவி வரும் இவ் வேளையில் சுற்றுப் புறச் சூழலைத் தூய்மைப்படுத்தும் பணியை முன்னெடுக்கும்எழுச்சியூட்டலாகயாழ்பல்கலைக் கழக மாணவர்களின் சுற்றுச் சூழல் துப்புரவுப் பணி அமையும் என தெரிவிக்கப்படுகின்றது. (ந)

## மகேஸ்வரன் மணிமண்டப திறப்புவிழாவும் நூல் வெளியீட்டு விழாவும்

முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் கொழும்பு மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரனின் நினைவாக யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் மகேஸ்வரன் மணி மண்டபம் திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்னாரது பிறந்த தினமான நாளை 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இந்த மண்டபம் சிவஸ்ரீ.சம்பு மகேஸ்வரன் குருக்களினால் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த திறப்பு விழாவின் போது ஈழத்து சிதம்பரத் திருத்தலயாத் திரை, முருகப்பெருமான் தோத்திர மாலை ஆகிய இரு நூல்களும் வெளியிடப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானக்குமரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நூல் ஆய்வுரைகளை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி ம.வேதநாதன், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ச-5)

## டெங்கு விழிப்புணர்வில் உடுவில் இ.செ.சங்கம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உடுவில் பிரிவு டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

டெங்கு ஒழிப்பில் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தெருக்கூத்து நாடகங்களை நடத்தவுள்ளது.

இதன் முதற்கட்டமாக இன்று காலை 8.30மணிக்கு கொக்குவில், குளப்பிட்டி சந்தியில் தெருக்கூத்து நாடகம் இடம்பெறும். (ந)

## நாட்டில் ஆட்சிமாற்றத்துக்கான...

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிரணியில் இணைவது தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.க மட்டக்களப்பு அமைப்பாளர் சசிதரன், ஆர்.யோகராஜன் ஆகியோர் கலந்துகொண்ட ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்த மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது,

எதிர்க்கட்சிகள் இணைந்து ஐக்கிய தேசிய முன்னணியை உருவாக்கிய வேளையிலும், பின்னர் டிசம்பர் 18ஆம் திகதி கண்டியில் சரத் பொன்சேகாவின் முதல் பிரசார கூட்டத்தை நாங்கள் நடத்தியபொழுதும் இந்நாட்டில் ஆட்சி மாற்றத்திற்கான அலைஅடிக்கவில்லை. ஆனால் இன்று எமது அயராத உழைப்பின் காரணமாகவெற்றி அலைஓங்கிவீசஆரம்பித்து விட்டது.

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க இங்கு சொன்னதுபோல இந்நாடு முழுக்க வாழும் தமிழ் மக்கள் மத்தியிலேயே எனது செயற்பாடுகள் மாற்றத்தை கொண்டுவர தொடங்கியுள்ளது.

அந்த கருத்து உண்மை யானது என்பது நாடு முழுக்க வாழும் தமிழ் மக்களுக்கு தெரியும்.

இந்நாட்டின் வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் மேற்கில் வாழுகின்ற தமிழ் மக்கள் மத்தியி லேயே நாம் ஆட்சி மாற்றத்திற்கான அலையை ஏற்படுத்தியுள்ளோம்.

இந்நிலையில் இன்று எமது எதிரணி கூட்டணியுடன் வந்து இணைந்து கொள்ளும் அனைவரையும் நாம் வரவேற்கின்றோம்.

ஆட்சி மாற்றம் காலத்தின் கட்டாயம் என்பது இன்று அனைவராலும் உணரப்படுவதன் அடையாளங்களாகவே சிவகீதா பிரபாகரனினதும் மற்றும் இதுபோல் எம்முடன் வந்து இணைந்துகொண்டுள்ள அனை வரது நிலைப்பாடு களையும் நாம் பார்க்க வேண்டும் என்றார். (ச)

## எதிர்க்கட்சி...

தேரர் நாட்டின் முக்கிய மான பௌத்த பிக்குகளில் ஒருவர் எனவும் மத அடிப்படையில் பல்வேறு முக்கிய பொறுப் புக்களை வகித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## வேலுப்பிள்ளை...

வேலுப்பிள்ளை அவர்களின் மறைவை தொடர்ந்து சிறிலங்கா அரசு மீது பல்வேறான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவந்த நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவரின் தாயாரை விடுவிக்க மகிந்த ராஜபக்ஷ அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 86 வயது நிரம்பிய திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்களை சந்திக்க திருமாவளவன் அடங்கிய குழுவுக்கே முன்னர் அனுமதி மறுக்கப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தம்பர தேரர்...

ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்தே தேரருக்கு பிணையில் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி பணம் வசூலித்த குற்றச்சாட்டின் பேரில் தம்பர அமிலதேரர் கைது செய்யப்பட்டிருந்தார். 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் 2 இலட்சம் ரூபாயான இரண்டு சரீர பிணைகளிலும் தேரரை விடுவிக்குமாறு ஹொரணை நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

இந்த வழக்கின் விசாரணை ஏப்ரல் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதுடன் அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகு மாறு தம்பர அமிலதேரருக்கு நீதவான் உத்தரவிட்டார். மாதம்தோறும் இறுதி ஞாயிற்றுக்கிழமையில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராகுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ச-5)

## மட்டக்களப்பு மேயரின்...

தீர்மானித்ததனைத் தொடர்ந்து பாதுகாப்பு அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

மட்டக்களப்பு மேயருக்கு பெண் சிப்பாய்கள் உள்ளிட்ட 25 இராணுவப் படைவீரர்கள் பாதுகாப்பளித்து வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

சரத் பொன்சேகாவிற்கு ஆத்ரவளிக்கும் நோக்கில் சிவகீதா பிரபாகரன் கொழும்பிற்கு வருகை தந்ததனை அடுத்து அவருக்கு வழங்கப்பட்டிருந்த இராணுவப் பாதுகாப்பு முழுமையாக அகற்றப்பட்டுள்ளது.

சிவகீதாவின் இல்லத்திற்கு அளிக்கப்பட்டிருந்த பாதுகாப்பும் அகற்றிக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தற்போது இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மட்டுமே வீட்டைப்பாதுகாத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவிடம்...

அறிவித்திருக்கும் முடிவு குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியிருப்பதாவது,

போரின் வடுக்களால் ரணமாகியிருக்கும் எமது மக்களுக்கு உடனடியான புனர்வாழ்வு தேவையாக உள்ளது. அவர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இவற்றை செய்வதற்கு அந்த போரை நடத்தியமகிந்த ராஜபக்ஷவையே மீண்டும் ஆட்சியில் அமர்த்தினால் எமது மக்களுக்கு விடிவு கிட்டுமா என்று சிந்தித்துப்பார்த்தால் அதற்கு வழியே இல்லையென்பதுதான் வெளிப்படை உண்மை. மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்தால், தற்போது அனுபவிக்கும் துன்பங்களை விட அதிக துன்பங்களை எமது மக்கள் முகம்கொடுக்க நேரிடும்.

ஆகவே, ஆட்சி மாற்றம் ஒன்றின் ஊடாக எமது மக்களின் அபிலாசைகளை பெற்றுக் கொள்வதற்கு தமிழ்க் கூட்டமைப்பு முடிபெடுத்தது. அதன்பிரகாரம் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிக்க நாம் தீர்மானித்திருக்கிறோம். பொன்சேகாவுக்கு ஆதரவளிக்க வேண்டிய பொறுப்பினை மிகவும் மகிழ்ச்சியுடன் எமது மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கூறவில்லை. கொடூரமான போருக்கு மகிந்த உத்தரவிட்டிருந்தபோது அதனைக் களத்திலே பொன்சேகா நடத்திய விதம் மிகவும் பயங்கரமானது.

ஆனால் இன்றையநிலையில் அவ்வாறு போரை நடத்திய மகிந்தவுக்கு அரசியல் ரீதியில் சவாலான வேட்பாளர் உள்ளார் என்றால் அது பொன்சேகா மட்டுமே ஆவர். அவர் தற்போது சாதாரண பிரஜை. இராணுவ அதிகாரி அல்லர். அரசியலில் பிரவேசித்துள்ள பொன்சேகாவின் அணுகு முறைகள் வித்தியாசமாகவுள்ளன. சிறுபான்மை மக்களின் உரிமைகளையும் தேவைகளையும் உணர்ந்து கொண்டவராக அவர் காணப்படுகின்றார். அவரில் பல வித்தியாசங்கள் தெரிகின்றன.

அப்படி இருக்கையில் அவருக்கு ஆதரவு தெரிவித்து அவரை சரியான பாதையில் வழிநடத்தி அதன் ஊடாக எமது மக்களுக்குரிய நலன்களை பெற்றுக்கொள்வதில் என்ன பிழை இருக்கிறது என்ற முடிபுடனேயே எமது கட்சி அவருக்கான ஆதரவை தெரிவித்தது.

அதேவேளை ஆட்சிக்குவரும் பொன்சேகா தமிழ்மக்கள் கேட்பது எல்லாவற்றையும் தந்துவிடுவார் என்று நம்புவதற்கு நாங்கள் முட்டாள்கள் அல்லர். அவர் ஆட்சிக்கு வந்தால் சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பில் பேசுவதற்கான ஒரு இடைவெளி கிடைக்கும். அந்த தருணத்தை நாங்கள் பயன்படுத்துக்கொள்ள ஒருவாய்ப்புக்கிடைக்கும். தமிழர்களுக்கு தீர்வு வழங்குவது தொடர்பான சகல நடவடிக்கைகளையும் தூக்கியெறிந்து விட்டு தீர்வு தொடர்பாக யோசனைகள் கூறுபவர்களின் ஆலோசனைகளையும் நிராகரித்து விட்டு ஆட்சி நடத்தும் மகிந்தவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவந்தால் அந்த இடைவெளி கிடைக்கப்போவதில்லை.

பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் எமது முடிபு தமிழ்க் கூட்டமைப்பு தனித்து எடுத்த தீர்மானமாகும். இதில் யாருடைய தலையீடும் இல்லை. இந்தியாவின் ஆலோசனைப்படி நாங்கள் நடந்துகொள்கிறோம் என்றும் இந்தியாவின் அழுத்தத்தின்பிரகாரம் முடிபுகளை மேற்கொள்கிறோம் என்றும் கூறப்படும் விமர்சனங்களில் எந்த உண்மையும் கிடையாது. எதிர்காலத்தில் எமது முடிபுகள் எமதுமக்கள்சார்ந்ததாக அவர்களின்நலன் சார்ந்ததாக அவர்களின் கருத்துக்களின் பிரதிபலிப்பாகவே அமையும் என்றார் அவர். (ச-5)

## இரவு நேர...

ஆசனப்பதிவுகளை யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை யாழ். மத்திய பேருந்து நிலையத்திலிருந்து செயலாற்றப்படும் சகல பாதைகளிற்குமான இறுதிப் பேருந்து சேவை நாளை முதல் தினமும் இரவு 8.30 மணிக்கு நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## கூட்டமைப்பு...

நடத்தினார்.

இச்சந்திப்பில் கைதிகளின் விடுதலை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை சிறைச்சாலை ஆணையாளர், மாவைசேனாதிராஜா எம்.பியுடன் கைதிகளின் நிலைதொடர்பாக கேட்டறிந்து கொண்டதாக தெரிவித்தார். (ச)

## சனல் 4 இல் வெளியிடப்பட்ட...

அரச படையினர் போன்று உடையணிந்தவர்களினால் கைகள் கட்டப்பட்ட நிர்வாணமாக்கப்பட்ட சிலர் சுட்டுக்கொல்லப்படும் காட்சி சனல் 4 வீடியோவில் இடம் பெற்றிருந்தது. ஆரம்பம் முதலே இலங்கை அரச தரப்பினர் அந்த வீடியோ போலியானது என்று கூறியிருக்கின்றார்கள்.

ஆனால் அந்த வீடியோக் காட்சிகள் உண்மையானவை என்று ஐக்கிய நாடுகள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட புலனாய்வாளர்கள் தற்போது குறிப்பிடுகின்றார்கள்.

சட்டத்திற்கு புறம்பான எதேச்சதிகார விசாரணையற்ற கொலைகள் குறித்த ஐ.நாவின் சிறப்புத் தூதுவரான பிலிப் அல்ஸ்ரன், இந்த விவகாரம் குறித்து ஆராய்ந்த சிறப்பு நிபுணர்கள் இந்த வீடியோ குறித்து அனைத்து சந்தேகங்களையும் களைந்து விட்டதாக குறிப்பிடுகின்றார்.

இந்த வீடியோ நாடாவை ஆராய்ந்த ஒவ்வொரு நிபுணரும் அதனை மிகவும் அவதானமாக ஆராய்ந்து இருக்கிறார்கள். அதன் மூலம் அந்த வீடியோ போலியானது என்று கூறுவதற்கு எந்தவிதமான ஆதாரமும் கிடையாது என்ற முடிபுக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள்.

அவர்களது முடிபு குறித்து எனது கருத்து என்னவென்றால் இந்த வீடியோ உண்மையானது என்று தெளிவாக அவற்றில் முடிபு செய்திருக்கிறார்கள் என்பதுதான்.

அத்தோடு இலங்கை நிபுணர்களால் எழுப்பப்பட்ட பல்வேறு சந்தேகங்களை இந்த சுயாதீன நிபுணர்கள் ஆதாரம் காட்டி நிராகரித்திருக்கிறார்கள் என்றார் பிலிப் அல்ஸ்ரன்.

அத்துடன் இலங்கை அரசாங்கத்தால் இந்த வீடியோ குறித்து ஆராயுமாறு நியமிக்கப்பட்ட குழுவின் முடிபுகளில் குறை இருப்பதாகவும் செய்தியாளர் சந்திப்பொன்றில் ஐ.நாவின் சிறப்புத்தூதுவரான பிலிப் அல்ஸ்ரன் குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையர்களான இந்த 4 நிபுணர்களும் வெளியிட்டிருக்கின்ற அறிக்கை ஒரு போதும் முழுமையாக வெளியிடப்பட்டிருக்கவில்லை.

ஆனால் குறித்த தகவல் கொழும் பில் இருக்கின்ற ராஜ தந்திரிகளுக்கான மற்றும் முக்கிய செய்தியாளர்களுக்கான சந்திப்பொன்றில் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

அவர்கள் அனைவரும் எந்தவித காரணங்களும் சொல்லாமல் அவை முழுமையாக போலியானவைதான் என்று கூறினார்கள் என்றார் அல்ஸ்ரன்.

ஆனால் இந்தவீடியோ விடுதலைப் புலிகளின் பிரசாரம் என்று இன்னமும் கூறுகிறார் பிரிட்டனுக்கான இலங்கையின் தூதுவர் ஹாஸ்ரிஸ் நிகால் ஜெயசிங்க, இந்த வீடியோவில் காண்பிக்கப்பட்டவர்கள் இலங்கை படையினர்தான் என்று எவ்வாறு கூறமுடியும் என்றும் அவர் கேள்வி எழுப்புகிறார்.

இந்தவீடியோவை பார்த்துவிட்டு இதில் தமிழ்மக்களை இலங்கை சிப்பாய்கள் கொலை செய்கிறார்கள் என்று ஒருவரால் எவ்வாறு கூறமுடியும்? அந்த ஆட்கள் இலங்கை சிப்பாய்கள் என்றும் அதில் நிர்வாணமாக இருப்பவர்கள் விடுதலைப்புலிகள் என்றும் ஒரு நிபுணர் எவ்வாறு சொல்ல முடியும்?

இதை என்னால் கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை என்றார் நிஹால் ஜெயசிங்க. (ச-3,5)

## மரண அறிவித்தல்



வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைப்பாறிய காணிப்பதிவு உத்தியோகத்தர்

### திருவேங்கடம் வேலுப்பிள்ளை

அவர்கள் 06.01.2010 (புதன்கிழமை) இரவு 8 மணிக்கு பானாகொடை இராணுவத் தடுப்பு முகாமில் காலமானார்.

அன்னார் திருமதி பார்வதிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், மனோகரன் (டென்மார்க்), திருமதி ஜெகதீஸ்வரி மதியாபரணம் (தமிழ்நாடு), திருமதி வினோதினி இராஜேந்திரன் (கனடா), பிரபாகரன் (தலைவர், தமிழீழ விடுதலைப்புலிகள்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 09.01.2010 (சனிக்கிழமை) நண்பகல் 12 மணிதொடக்கம் வல்வெட்டித்துறை திருவில் சதுக்கத்தில் வைக்கப்பட்டு 10.01.2010 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று காலை 11 மணியளவில் வல்வெட்டித்துறை ஊறணி பொது மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். தயவு செய்து இத் தகவலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
எம்.கே.சிவாஜிலிங்கம்
யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ். மாவட்டம்

(C-4171)

நீங்கள் மக்கள் மத்தியில் தனித்துவம் பெறுவதற்கு CIMA
உங்களை நிதித்துறையில் பயிற்சி பெற்ற வணிகத்தலைவராக உயர்த்தும்.
அனைவரும் பயிலலாம்
(வரையறுக்கப்பட்ட பதிவுகள்)
0772 395 895

## சித்தன்கேணி சிறி சிவசிதம்பரேஷ்வரா ஆலயம்

### விசேட பொதுக்கூட்டம்

தலைவர்:- தி.வி.கே.விஜயரட்ணம் (ஜே.பி)
இடம்:- ஆலய மண்டபம்
காலம்:- 10.01.2010 ஞாயிறு பிற்பகல் 2.00 மணி
விடயம்:- ஆலய பாலஸ்தாபன புனருத்தார கும்பாபிஷேகம் பற்றியது

சிவன் கோயில்
சித்தன்கேணி

ச.ஐங்கரன்
செயலாளர்
சிவசிதம்பரரேஷ்வரா
ஆலய பரிபாலனசபை

(C-4170)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.